வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 14.02.2023 செவ்வாய்க்கிழமை இதழ் : 67 பக்கங்கள் : 16

### தேர்தலுக்கு புதிய சிக்கல்

# வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படாது

## தேர்தல் குழுவுக்கு அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 14

வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கான தொகையை செலுத்தாதுவிடின் அவை அச்சிடப்படமாட்டாது என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு அரசாங்க அச்சகம் எழுத்துமூலமாக அறிவித்துள்ளது. இந்தத் தகவலை தேர்தல் ஆணைக்குழு நேற்றுத் தெரிவித்தது. 15



## அத்தியடியில் பெண் அடித்துக் கொலை!

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அத்தியடிப் பகுதியில் பெண் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் கணவனைப் பிரிந்து தனித்து வாழும் ஒரு பிள்ளையின் தாய் ஒருவரே சந்தேகத் துக்கிடமான முறையில் இறந்துள்ளார். 15

## சுமண தேரரை குறிவைத்து துப்பாக்கி சூடு

மட்டக்களப்பு, பெப்.

மட்டக்களப்பு சிறீ மங்களராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரரை குறி வைத்து அடையாளம் தெரியாத நபர் துப்பாக்கியால் சுட்டுள்ளார். இதில், தேரருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட போது தேரர் தனது அலுவலக அறையில் வேலை செய்து கொண்டிருந்தார் என்றும் 15

## இழுத்தடிக்கும் சீனா சிக்கலில் இலங்கை!

கொழும்பு, பெப். 14

இலங்கை கடனை மறுசீரமைக்க இரு வருடங்களையே சீனா வழங்கியது. இதனால், ஐ. எம். எவ்விடம் இருந்து கடனை இலங்கை பெறுவதில் இழுத்தடிப்பு நெருக்கடி தொடர்கிறது என்று கூறப்படுகின்றது.

இலங்கை 290 கோடி டொலர்களை சர்வதேச நாணய நிதியமான - ஐ. எம். எவ்விடம் கேட்டுள்ளது. இந்தத் தொகையை இலங்கை பெறுவதற்கு இரு தரப்பு கடன்களை இலங்கை மறுசீரமைப்பு செய்ய வேண் டும். இலங்கைக்கு அதிக 15

## மகிந்தவின் அரசியல் பயணத்தை நாமல், பஸில் அழித்து விட்டார்கள்!

### விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, பெப். 14

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் பயணத்தை நாமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ முழுமையாக சீரழித்து விட்டார்கள். ராஜபக்ஷர்களுடன் இனி ஒன்றிணைய போவதில்லை - என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசாரம் புத்தளத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக தீவிரமடையும் என முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையில் பலமுறை எடுத்துரைத்தோம். வெளிநாட்டு கையிருப்பு ஏதும் கிடையாது என்று முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமைச்சரவை தவறாக வழிநடத்தினார்.

பொருளாதார நெருக்கடி 15



## பிரெஞ்சு தூதுவருடன் கூட்டமைப்பு சந்திப்பு

கொழும்பு, பெப். 14

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டின் தூதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று திங்கட்கிழமை சந்தித்துப் பேசினர்.

பிரெஞ்சு தூதரகத்தின் அழைப்பின்பேரில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார 15

## வாள்வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, பெப். 14

வாள் வெட்டுக்கு இலக்காகி ஒருவர் பலியானதுடன் மூவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் 15

## மின் கட்டணம் உயராவிடின் பெரும் பாதிப்புகள் ஏற்படும்!

### இலங்கை மின்சார சபை

கொழும்பு, பெப். 14

மின்சார சபை கோரிய படி 60 சதவீத மின்கட்டண அதிகரிப்புக்கு அனுமதி வழங்காவிட்டால் வரும் நாட்களில் பெரும் நெருக்கடி நிலை தோன்றும். அத்துடன், மின் உற்பத்திக்கான எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகியவற்றை கொள்வனவு செய்வதிலும் பாதிப்புகள் ஏற்படும் என்று இலங்கை 15

## காதலர் தினத்துக்காக கஞ்சா கலந்த சொக்லேட்!

### ஆயுர்வேத திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 14

காதலர் தினத்தை முன்னிட்டு கஞ்சா கலந்த சொக்லேட் வெளியிடப்பட்டுள்ளது என்று ஆயுர்வேத திணைக் களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், கஞ்சா கலந்த சொக்லேட்களை தயாரித்து வெளியிட்ட நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் 15

## நான்கு அரசியல் கைதிகள் பிணையில் செல்ல அனுமதி!

கொழும்பு, பெப். 14

காலி கடற்படை முகாம் மீதான தாக்குதல் தொடர்பில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு அரசியல் கைதிகள் 14 வருடங்களின் பின்னர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று காலி மேல் நீதிமன்றில் 15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாண கலாசார நிலையத்தின் உத்தியோகபூர்வ கையளிப்பு வைபவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அதனை படித்துவிட்டு லண்டனிலிருந்து ஒரு நண்பர் குறுந்தகவல் அனுப்பியிருந்தார். அதில் தமிழகத்தின் கலைஞர்ஷகளை அழைத்து நிகழ்ச்சிகளை செய்வது தொடர்பாக குறிப்பிட்டிருந்ததை, நல்ல யோசனை என்று எழுதியிருந்த அவர், புலம்பெயர் தமிழர்களின் கலை நிகழ்சிகளையும் நடத்தலாம் என்றும் ஆலோசனை சொல்லியிருந்தார்.

அவை எல்லாம் இனி அந்த நிலையம் தமிழர் கைகளுக்கு வந்தால் சாத்தியமாகலாம்.

அந்த கலாசார நிலையத்தின் பெயரை சரஸ்வதி மண்டபம் என்று பெயர் மாற்றலாம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யோசனை தெரிவித்திருந்தார். ஒரு சைவனாக இந்த ஊர்க் குருவிக்கும் அது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால், யாழ்ப்பாண மண் ஒரு சிவபூமி என்றாலும், அது மத அடையாளங்களுக்கு அப்பால்பட்ட பூமி. அங்கே இதுபோன்ற கலாசார நிலையத்துக்கு ஒரு மத அடையாளத்தை சூட்டுவது பொருத்தமானது இல்லை என்பதும் ஜனாதிபதிக்கு தெரியாததல்ல. ஆனால், அவர் எப்போதும் போல இங்கே மக்களை பிரித்தாளும் தனது முயற்சியில்தான் அப்படியொரு குண்டு ஒன்றைப் போட்டுச் சென்றாரா என்பதும் தெரியவில்லை.

சிலவேளை, இந்திய மத்திய அரசு இன்று பாரதிய ஜனதா கட்சியின் கைகளில் இருப்பதால், இந்த நிலையத்துக்கு ஒரு மத அடையாளத்தை அவர்களும் விரும்பக்கூடும். ஆனால், அத்தகைய அடை யாளத்தை இடுவதன் மூலம், அந்த நிலையத்தின் நோக்கத்தையே மாற்றிவிட முயலக் கூடாது.

இந்த விடயத்தை எழுதிக் கொண்டிருக்கின்றபோது இன்னுமொரு நிறுவனம் நினைவுக்கு வருகின்றது.

கொழும்பில் தமிழர்களின் அடையாளமாக இருந்து கொண்டிருப்பது கொழும்பு தமிழ் சங்கம் என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்காது.

எட்டுத் தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் பணியாற்றி வரும் கொழும்பு தமிழ் சங்கத்துக்கு, சு.ச. பொன்னம்பலம் முதலியார் அதன் முதலாவது தலைவராக இருந்தார். அரசியலுக்கு வருவதற்கு முன்னதாக பண்டிதர் கா. பொ. இரத்தினம், மற்றும் எச். டபிள்யூ. தம்பையா, க. செ. நடராசா, ந. மாணிக்க இடைக்காடர் என்று பல தமிழறிஞர்கள் அதன் தலைமைப் பதவியில் இருந்து தலைநகரில் தமிழ்ப்பணி ஆற்றினார்கள்.

தொன்மையானதும் சொல்நயம் மிக்கதும் இலக்கண இலக்கிய வளம்மிக்கதும், அறிவு இனிமை பண்பாடு மிக்கதுமான எம் அன்னை தமிழ் மொழியை சங்கத் தொலைநேக்கு கூறுக்க மைய பண்டைய தமிழ்ச்சங்க வழி நின்று கடந்த எண்பது வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வருகின்றது கொழும்பு தமிழ் சங்கம்.

சேவை அர்ப்பணிப்புடையோரின் ஒருமித்த உழைப்பைக் கொண்ட தமிழ்ப் பண்பாட்டின், பன்முகப்பாட்டுக்கு மதிப்பளித்து, அவை ஒவ்வொன்றினதும் வளர்ச்சிக்கும் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கும், தமிழாய்வுக்கும் ஊக்கமளித்து, உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள தமிழ்ப் பண்பாடு நிலையங்களின் தகவல் பரிமாற்ற நிறுவனமாகக் கொழும்பை தலைமையகமாகக் கொண்டு இயங்கி தமிழ் மொழியின் செழுமையையும் வளர்ச்சியையும் ஊக்குவித்தல் என்பதே தமது நோக்கமாகக்கொண்டு இயங்கிவரும் இந்த நிறுவனம் இதுவரை எந்தவோர் அரசியல் அடையாளமும் இன்றியே செயல்பட்டு வருகின்றது அதன் சிறப்பு.

ஆனால், அதன் எண்பதாண்டுகால பணியிலும் ஒரு கறுப்புப்புள்ளி வைத்தது போல தற்போது முழுநேர அரசியல்வாதி ஒருவரை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருவதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

அதுவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான காண்டீபன் தற்போது அதன் தலைவராக இருந்து வருகின்றார். இந்த நாடு ஒரு நாடாக இருந்தாலும் அதில் இரண்டு தேசங்கள் இருக்கின்றன என்பதில் உறுதியாக இருந்து கொண்டிருக்கும் ஒரு கட்சியை சேர்ந்த ஒருவர் கொழும்பு தமிழ் சங்கத்துக்கு தலைவராக இருப்பது அந்த அமைப்பு இது வரை கட்டிக்காத்துவந்த பெருமையை இல்லாமல் செய்துவிட்டதோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. அரசியலுக்கு அப்பால் - இன்றைய அதன் தலைவர் அதற்கு தகுதியானவர் தான் என்பதையும் இங்கே பதிவுசெய்வது அவசியம்தான்.!

- ஊர்க்குருவி

# சட்டவிரோத கடற்றொழிலை தடுக்கக்கோரி போராட்டம்!



வடமராட்சி, பெப். 14

சட்டவிரோத கடற்றொழில்களை தடை செய்யக் கோரி நேற்று வடமராட்சி கிழக்கு - உடுத்துறை மீனவர்கள் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

சுருக்கு வலை உள்பட பல்வேறு சட்டவிரோத தொழில்கள் வடமராட்சி கிழக்கில் இடம்பெற்று வருவதாகவும் இதனை கட்டுப்படுத்துவதற்கு கடற்படை மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்ட இடத்துக்கு வருகை தந்த மருதங்கேணி பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் மீனவர்களுடன் சமரசத்தில் ஈடுபட்டனர்.

இதன் அடிப்படையில் நாளைய தினம் (இன்று) இந்த விடயம் தொடர்பில் ஆராய 55 ஆவது படைப் பிரிவின் தலைமையகத்தில் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது வரை போராட்டத்தை கைவிடுமாறு கோரினர்.

இதை ஏற்ற மீனவர்கள் போராட்டத்தை கைவிடுவதாகவும் நாளை (இன்று) நல்ல முடிவு தரப்படாத பட்சத்தில் மீண்டும் போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்தனர்.

போராட்டத்தில் பங்கேற்ற மீனவர்கள், நீரியல் வளத்துறை - தொழில் அமைச்சால் விடுக்கப்பட்ட கட்டளைகளை கடற்படையினர் செயல்படுத்துவதில்லை. சட்ட விரோத தொழிலில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டியிருந்தனர். (ஐ-02)

# ராஜபக்ஷர்களின் அரசு இல்லையேல் நாட்டுக்கு எதிர்காலமும் இல்லை!

## இப்படி கூறுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, பெப். 14

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நிச்சயம் இடம் பெறும். ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறாவிடின், நாட்டுக்கு எதிர்காலம் கிடையாது என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

களுத்துறையில் அவர் பங்கேற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தலை கண்டு அச்சமடைய வேண்டிய தேவை பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது. ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார்கள். ஆகவே, பெரும்பான்மை மக்கள் ராஜபக்ஷர்களுக்கு ஆதரவு வழங்குவார்கள். பல்வேறு காரணிகளால் பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியை தோற்றுவித்தது.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் கூட்டணியாக ஒன்றிணைந்தவர்கள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக 69 இலட்சம் மக்களாணையை பலவீனப்படுத்தினார்கள். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக மாத்திரம் ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்து, அவர் தலைமையில் அரசாங்கத்தை ஸ்தாபித்தோம்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளதால் பொதுஜன பெரமுனவின் அடிப்படை கொள்கைகளை விட்டுக்கொடுக்க முடியாது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் 9ஆம் திகதி நிச்சயம் இடம்பெறும். பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முன்னிலைப்படுத்தி மொட்டு சின்னத்தில் போட்டியிடுவோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காக கொண்டு வீடு வீடாகச் செல்வோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பின் போது மக்கள் நாட்டுக்கு யார் சேவையாற்றியுள்ளார்கள், யார் நாட்டை சீரழித்தார்கள் என்பதை ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறாவிடின் நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது - என்றார். (ஐ)

## 21இல் கூடுகிறது பாராளுமன்றம்!

கொழும்பு, பெப். 14

பாராளுமன்றம் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கடந்த 10ஆம் திகதி புதிய கூட்டத்தொடர் நடந்தது. இதன்போது, பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான விடயமும் அறிவிக்கப்பட்டது. (ஐ)

## பிச்சை எடுக்கும் சிறுவர் தொடர்பாக அறிவியுங்கள்!

கொழும்பு, பெப். 14

பிச்சை எடுப்பதற்கு சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டால் அது தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் சிறுவர் பிச்சையெடுக்கும் சம்பவங்கள் வழமையாக பதிவாகி வருகின்றன. போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் பிச்சை எடுப்பதற்கு அதிக வாய்ப் புள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஓய்வு பெற்ற 18,000 பேருக்கு பணிக்கொடைக்கு அனுமதி!

### அமைச்சரவை அளித்தது

கொழும்பு, பெப். 14

அத்தியாவசிய மருந்து பொருள்கள் கொள்வனவு, நெல் கொள்வனவு, போசாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்குமான நிதியை விடுவிக்க அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியது.

இதேபோன்று, 2022 ஆம் ஆண்டு முதல் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கான பணிக்கொடை நிலுவைகளை அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவையில் இந்தத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஈழநாடு
Eelanadu
14.02.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்க தூதுவரின் கவனத்துக்கு?

இலங்கையின் பொருளாதார மீட்சிக்காக அமெரிக்க நிறுவனங்களுடன் தாம் கலந்துரையாடி வருகிறார் என்று அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்திருக்கின்றார். இலங்கையின் பொருளாதார மீட்சியில் அமெரிக்காவின் பங்களிப்பு அவசியம். ஓர் உலக சக்தியென்னும் வகையில் அமெரிக்காவின் ஆதரவின்றி இலங்கை முன்னோக்கி பயணிப்பது கடினம். அமெரிக்க தூதுவரின் இந்த முயற்சியானது - இலங்கையில் வாழுபவர்கள் என்னும் வகையில் தமிழ் மக்களுக்கும் மகிழ்ச்சியான செய்திதான். ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பொருளாதார மீட்சியுடன் அனைத்தும் முற்றுப்பெற்று விடாது.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கும் தமிழ் மக்களுக்கும் எந்தவொரு தொடர்புமில்லை. ஏனெனில், நாடு சுதந்திரமடைந்ததாக சொல்லப்படும் காலத்திலிருந்து இலங்கையின் கொள்கைத் தீர்மானங்களுக்கும் வடக்கு - கிழக்கை தாயகமாகக் கொண்டு வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. சிங்கள ஆளும் வர்க்கத்தின் வரலாற்று தவறுகளின் விளைவாக இலங்கைத் தீவு வரலாற்று நெருக்கடிக்கு உள்ளாகியிருகின்றது. பொருளாதார நெருக்கடியுடன் எவ்வித தொடர்புமில்லாத தமிழ் மக்கள் சிங்கள ஆளும் வர்கத்தின் தவறுகளால் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றனர். சிங்களவர்களின் ஒடுக்குமுறை அரசியல் தீர்மானங்களால் கடந்த 75 வருடங்களாக இரண்டாம்தர பிரஜைகளாக வாழ்ந்துவரும் தமிழ் மக்களோ - இன்று சிங்கள ஆளும் வர்க்கத்தின் மோசமான பொருளாதார திட்டமிடல்களால் பொருளாதார நெருக்கடிக்கும் முகம்கொடுக்கும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பில் சிந்திக்கும்போது அமெரிக்க இராஜதந்திர சமூகம் தமிழ் மக்களின் நிலைமை தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். உதட்டளவு கரிசனைகளுடன் விடயங்களை நிறுத்திவிடக்கூடாது. அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜதந்திரி விக்ரோறியா நூலண்ட், படிப்படியாக முன்னேறுவது தொடர்பில் பேசியிருந்தார். விடயங்களை கையாளுவதற்கான வழிவரைபடமொன்றை தயாரிக்குமாறும் கூறியிருந்தார். ஆனால், அரசியலமைப்பிலுள்ள விடயங்களைக்கூட இந்த நாட்டில் அமுல்படுத்த முடியாமல் இருக்கின்றது. தேரர்களை கண்டு அரசியல் தலைமைகள் அஞ்சுகின்றனர். இந்த நிலையில், வழிவரைபடத்துடன் எவ்வாறு விடயங்களை கையாளுவது?

எனவே, வழமையான அணுகுமுறையில் விடயங்களை கையாள முடியாது. பொருளாதார மீட்சிக்கான உதவிகளை செய்ய முற்படும் அமெரிக்கா கூடவே, ஆரம்பகட்டமாக அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தையாவது முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று - வற்புறுத்த வேண்டும். இதுவரையான அமெரிக்க மென் அழுத்தங்கள் இலங்கைத் தீவில் எந்தவோர் ஆக்கபூர்வமான மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை.

இந்தப் பின்புலத்தில் சர்வதேச அழுத்தங்கள் என்னும் சொல் சலிப்பூட்டும் விடயமாக மாறியிருக்கின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லாமல் ஆக்குவதற்கு மேற்குலக நாடுகள் பல்வேறு வழிகளிலும் உதவியிருக்கின்றன. ஆனால், யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில்கூட தமிழ் மக்களின் கௌரவமான வாழ்வை உறுதிப்படுத்தும் முயற்சியில் ஒரு சிறு முன்னேற்றமும் ஏற்படவில்லை.

உலகளவில் மனித உரிமை மற்றும் ஜனநாயக விழுமியங்களை பாதுகாப்பதை வெளிவிவகார நிலைப்பாடாகக் கொண்டிருக்கும் - உலகின் முதல் சக்தியான அமெரிக்கா தொடர்ந்தும், சில வார்த்தைகளை உச்சரிப்பதோடு, விடயங்களில் திருப்திப்பட்டுக்கொள்ள முடியாது. ரணில் விக்கிரமசிங்க கூறிவரும் விடயங்களிலாவது முன்னேற்றங்கள் காண்பிக்கப்பட வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதற்கு அமெரிக்கா முயற்சிக்க வேண்டும்.

# உள்ளூராட்சி தேர்தலை பிற்போட 21 தடவைகள் அரசு திட்டமிட்டது!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

*கொழும்பு, பெப். 14*

உள்ளூராட்சி சபை தேர்தலை 21 தடவைகள் ஒத்திவைக்க அரசாங்கம் திட்டமிட்டது. ஆனால், அவை அனைத்தும் தோல்வியடைந்து உள்ளதாகவும் புதிய சதித்திட்டத்தின் மூலம் தேர்தலுக்கான நிதியை தடுக்க அரசாங்கம் செயல்பட்டு வருவதாக பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பாணந்துறையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இந்தத் தேர்தலை இப்போது பாராளுமன்றம் ஒத்திவைக்க வாய்ப்பில்லை. அதற்காகக் கொண்டு வரப்பட்ட அரசாணைகளுக்கு எந்தத் தடையும் இல்லை. நீதிமன்றத்தின் தரப்பில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், கடந்த 10ஆம் திகதி நீதிமன்றத்தில் தேர்தல் ஆணைக்குழு அளித்த அறிக்கையுடன் அது மறைந்துவிட்டது. தற்போது தேர்தல் ஆணைக்குழுக்கு வழங்கப்படும் செலவுகளை நிறுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

மார்ச் 9ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழு செய்ய வேண்டிய பணிகள் ஏராளம். முதலில் இந்த தபால் மூல வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இது பெப்ரவரி 22, 23, 24 திகதிகளில் பயன்படுத்தப்பட்டது. அதற்கு, வரும் 19 ஆம் திகதி வாக்கு அட்டைகளை வீடுகளுக்கு வழங்க வேண்டும்.

எதிர்வரும் 19ஆம் திகதி வாக்குச் சீட்டுகளைப் பெற, அவற்றை அச்சடித்து இப்போது விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால், கடந்த 9 ஆம் திகதி திடீரென வானில் இருந்து விழுந்தது போல் இந்த தேர்தலை நடத்த முடியாது.

வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுதல், உரிய வாக்குச் சாவடிகளைத் தயாரித்தல், பாதுகாப்பு சேவைகளைத் தயாரித்தல், தபால் மூல வாக்களிப்பு போன்றவற்றைச் செய்ய வேண்டும். அந்த சவாலை ஏற்று தேர்தல் ஆணைக்குழு தொடர்கிறது.

எனவே, இதற்காக தேர்தல் ஆணைக்குழுவிடம் பணம் வழங்கப்பட மாட்டாது என்ற பேச்சு தற்போது எழுந்துள்ளது.

சமீப காலமாக அரசு நடத்தும் நிகழ்வுகளை பார்க்கும் போது பணப்பற்றாக்குறை என்பது தீர்வாகாது. அரசாங்கத்தின் வருமானத்தை பார்த்தால் ஒருநாள் அரசாங்கத்தின் வருமானம் இந்தத் தேர்தலை நடத்தப் போகிறது.

சமீபத்தில், தொழில் வல்லுநர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், நிர்வாக சேவைகள் கூடுதல் வரி விதிக்கப்பட்டதாக பெரும் எதிர்ப்பு கிளம்பியது. அந்த வரி மூலம் இதுபோன்ற 10 தேர்தல்களை நடத்தலாம்.

சட்டத்தை அறிந்த அதிகாரிகள் என்ற வகையில், நிதியமைச்சின் செயலாளர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுக்கு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களை நினைவில் கொள்ள வேண்டும். ஈஸ்டர் தாக்குதல். அரச மைப்புச் சட்டம் விதித் துள்ள உத்தரவுகளை அமைச் சகங்களின் செயலாளர்கள் பின்பற்ற வேண்டும் என்று தீர்ப்பு தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளது.

சட்டத்தை மதிக்கும் அதிகாரி என்ற முறையில் அவர் அந்த பணியை செய்வார் என நம்புகிறோம்.

இந்தத் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன 10வீதம் வாக்குகளுக்கு மேல் பெறாது. பெறுவதை தடுப்பது எமது தேசிய பொறுப்பு. மகிந்த ராஜபக்ஷ, சமல் உள்ளிட்ட ராஜபக்ஷ தலைமுறையின் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பது அனைவரின் பொறுப்பாகும்.

புதிய அரசியலை உருவாக்க புதிய ஆட்கள் தேவை. அனுபவமுள்ளவர்களும் தேவை. உள்ளூராட்சி சபையை நாங்கள் சொந்தமாக நடத்த வேண்டும் - என்றார். (ஐ-சி)

# 'சொல்லாத கதைகள்' மின்னூல் வெளியீடு!

*யாழ்ப்பாணம், பெப். 14*

கவிஞர் அம்பியின் 94 ஆவது பிறந்ததினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு (இலங்கை நேரம்) அவர் எழுதிய சொல்லாத கதைகள் மின்னூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஏற்பாட்டில் லெ. முருகபூபதியின் ஒருங்கிணைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு திருமதி சகுந்தலா கணநாதன் தலைமை தாங்கவுள்ளார். இதில், நூல் வாசிப்பு அனுபவப் பகிர்வை அசோக் ஜனார்த்தனன் - சியாமளா யோகேஸ்வரன், கானா. பிரபா ஆகியோர் வழங்குவர்.

இந்த நிகழ்வில் சூம் செயலி மூலம் 841 9997 6388 என்ற அடையாள எண் மூலம் 272256 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்துகொள்ள முடியும். (ஐ)


# சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், பெப். 11*

புத்தூர் மேற்கு கலைமதி ஆலடி முருகன் ஆலய மகா கும்பிஷேக பெருவிழாவை ஒட்டி தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

இதில், இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில், சைவப் புலவர் செ. த. குமரன் "உதித்தனன் உலகம் உய்ய" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 14 செவ்வாய்க்கிழமை**
**சுபகிருது வருடம் - மாசி 02**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : நவமி**




**மேடம்**
உங்கள் செயலில் மாலை வரை லாபம் காண் பீர்கள். அதன்பின் நெருக்கடி உண்டாகும். நீங் கள் நினைத்தபடியே தொழில் முயற்சியில் முன் னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்**
தம்பதிகளிடம் ஏற்பட்ட பிரச்னை நீங்கும். உங்கள் முயற்சி நிறைவேறும். தடைபட்டிருந்த பணம் வரும். அலுவலகத்தில் செல்வாக்கு கூடும் நாள். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும்.

**மிதுனம்**
புதிய முயற்சி ஒன்று நிறைவேறும். வரும் பணத் தைக் கொண்டு கடனை அடைக்க திட்டமிடுவீர்கள். அமைதியாக செயல்பட்டு நினைத்ததை சாதித்துக் கொள்ளும் நாள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் தீட்டி செயல்பட ஆரம்பிப்பீர்கள். திருப்பு முனையான நாள். எதிர்பார்த்த பணம் வரும். வேலையை எதிர்பார்த்தவர்களுக்கு சாதக மான தகவல் கிடைக்கும்.

**சிம்மம்**
புதிய முயற்சி வெற்றியாகும். தொழிலை விரிவு செய் வீர்கள். உங்கள் அணுகுமுறையால் வருமா னம் அதிகரிக்கும். எதிர்காலம் பற்றிய எண்ணம் மேலோங்கும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**
குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் விலகும். மகிழ்ச்சியான நிலை உண்டாகும். பொருளாதார சிந்தனை அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்.

**துலாம்**
நீண்ட நாள் பிரச்னை ஒன்று தீர்வுக்கு வரும். பணவரவிற்கு வழி காண்பீர்கள். மனதில் உற் சாகம் அதிகரிக்கும். நீங்கள் விரும்பிய வகையில் செயல்பட்டு மகிழ்வீர்கள்.

**விருட்சிகம்**
பிள்ளையின் திருமணத்திற்காக முயற்சி மேற் கொள்வீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். குடும்ப வகையில் திடீர் செலவு உண்டாகும். புதிய முயற்சி எதுவும் இன்று வேண்டாம்.

**தனுசு**
நீங்கள் எதிர்பார்த்த வருமானம் இன்று உங்க ளைத் தேடி வரும். கடன்களை அடைப்பீர்கள். உங்கள் முயற்சியில் இன்று விவேகம் இருக்கும். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மகரம்**
வியாபாரத்தை விருத்தி செய்வதற்காக புதிய முயற்சியில் இறங்கும் நாள். பழைய முதலீடுகளில் லாபநிலை ஏற்படும். நேற்று நினைத்திருந்த ஒரு வேலையை நன்றாக செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்**
உறவினர்கள் ஆதரவுடன் உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் எண்ணம் நிறை வேறும் வருமானம் பல வழிகளில் வந்து சேர்ந்தாலும் உங்கள் மனம் நிம்மதியை தேடும்.

**மீனம்**
வெளியூர் பயணத்தில் எச்சரிக்கை அவசியம். வேலை பளுவின் காரணமாக உங்கள் உடலும் மனமும் சோர்வடையும். பணிபுரியும் இடத்தில் உங்கள் மீது சிலர் குற்றம் கூற முயற்சிப்பர்.

# தமிழ் மொழிக்கான மத்திய பல்கலைக்கழகம் வேண்டும்!

## தி. மு. க. பாராளுமன்றில் வலியுறுத்து

புதுடில்லி, பெப். 14

தமிழ் மொழிக்கான மத்திய பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்று பாராளு மன்ற உறுப்பினர் டி. ரவிக் குமார் நேற்று பாராளுமன்றத் தில் கோரிக்கை வைத்தார்.

மறைந்த முதல்வர் கருணா நிதியின் நூற்றாண்டு நினை வாக தமிழ் மொழிக்கென மத்திய பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க கோரிக்கை எழுந்துள்ளது. இதுகுறித்து விழுப்புரம் தொகுதி எம். பி.யான டி.ரவிகுமார் தன் எழுத்துபூர்வ உரையில் குறிப்



பிட்டிருப்பதாவது:

“இந்த பட்ஜெட்டில் சிறு பான்மை சமூகத்தினருக்கு இழைக்கப்பட்டிருக்கும் பாகு பாடுகளுக்குத் தீர்வு காணப் பட வேண்டும். அவர்களுக்கு நியாயமான நிதி ஒதுக் கீடு செய்யப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

மத்திய அரசு சம்ஸ்கிருத மொழிக்காக நான்கு பல்கலைக் கழகங்களை நிறுவியுள்ளது. 2023ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் திகதி மறைந்த தமிழக முதல மைச்சரும், சிறந்த தமிழறிஞரு மான மு. கருணாநிதியின் நூற் றாண்டு விழா ஆரம்பமாகிறது. அவரை கௌரவிக்கும் வகை யில், தமிழகத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக மத்திய பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்” என் றார். (ஐ)

# தி. மு.க வை வீழ்த்த விரும்பும் கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி!

## டி. டி. வி. தினகரன் சொல்கிறார்

தருமபுரி, பெப். 14

வரும் மக்களவைத் தேர்த லில் தி. மு. கவை வீழ்த்த விரும் பும் கட்சிகள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்று அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் தலைவர் டி. டி. வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்த டி. டி. வி. தினகரன்,

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலில் அ. ம. மு. க.வுக்கு குக்கர் சின்னம் கோரி உச்ச நீதி மன்றம் சென்றிருந் தால் நிச்சயம் கிடைத்திருக்கும். ஆனால், அதற்கான அவகாசம் இல்லாததால் அந்த முயற்சியை தவிர்த்து விட்டோம்.

இரட்டை இலை இன்று தவறானவர்கள் கையில் இருக் கிறது. எனவே, அந்த கட்சிக் கும் இடைத் தேர்தலில் ஆதரவு இல்லை. மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாத தி. மு. கவுக்கும் ஆதரவு இல்லை. 90 சதவீதம் வாக்குறு தியை நிறைவேற்றாத ஆட்சி இது. ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் பண நாயகம் வெல்லும் சூழல் இருந்தால் ஜனநாயகத்துக்கு இடமில்லை.

வரும் மக்களவைத் தேர்த லில் தி. மு. கவை வீழ்த்த விரும் பும் கட்சிகள் ஒன்றிணைந்து



செயலாற்ற வேண்டும். அந்த அணியில் இணைந்து நாங்களும் பணியாற்ற முன்வருவோம்.

அதேபோல, தமிழகத்தில் மலிந்து கிடக்கும் போதை பொருட்களால் மாணவர்கள் சீரழிந்து வருகின்றனர். சி.பி. ராதாகிருஷ்ணனை ஆளுநராக் கியிருப்பதை வரவேற்கிறோம் - என்றார். (ஐ)

# தீண்டாமைக்கு அடிப்படை பாரதிய ஜனதா கட்சியே

## காங்கிரஸ் தமிழக தலைவர் சாடல்

சென்னை, பெப். 14

“எந்தக் காலத்தில் தமிழகத் தில் முற்போக்கு கட்சிகள் தீண்டமையை ஆதரித்திருக்கி றார்கள்? தீண்டாமையை என்றைக்கு நியாயப்படுத்தி இருக்கிறார்கள்? தீண்டா மைக்கு எதிராக இந்த அரசும், எங்களுடைய கூட்டணியும், பொலிஸூம் இருக்கிறது” என்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியுள்ளார்.

நேற்று திங்கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித் தார். அப்போது அவரிடம் தமிழகத்தில் தீண்டாமைக் கொடுமை இருப்பதாக ஆளு நர் ஆர்.என்.ரவி பேசியிருப்பது குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில்,

“இந்தியாவில் தீண்டாமை இருக்கிறது. தீண்டாமை என்பது எல்லா கிராமங்களி லும் இருக்கிறது. ஆனால், அந்த தீண்டாமையை ஒழிப்ப தற்காக அறவே அகற்றுவதற் காக நாம் எடுத்திருக்கின்ற முயற்சிகள்தான் இதில் முக்கி



யம். இங்கு தீண்டாமை ஒரு குற்றம் என்று சட்டத்தில் மட்டும் சொல்லவில்லை. மகாத்மா காந்தி உளப்பூர்வ மாக சொன்னார். அதற்காக நாம் தியாகம் செய்திருக்கி றோம். ஏராளமான போராட் டங்களையும், வன்முறைகளை யும் சந்தித்திருக்கிறோம்.

எந்தக் காலத்தில் தமிழகத் தில் முற்போக்கு கட்சிகள் தீண்டமையை ஆதரித்திருக்கி றார்கள். தீண்டாமையை என்றைக்கு நியாயப்படுத்தியி ருக்கிறார்கள். தீண்டாமைக்கு எதிராக இந்த அரசும், எங்களு டைய கூட்டணியும், காவல் துறையும் இருக்கிறது. அங் கொன்றும் இங்கொன்றுமாக குற்றங்கள் நடைபெறுகிறது. நாம் இல்லையென்று சொல்ல வில்லை. அதை மூடி மறைக்க வும் இல்லை. ஆனால், ஒப்பிட் டுப் பார்க்க வேண்டும். உத்த ரப் பிரதேசம் எப்படி இருக்கி றது? பா. ஜ. க. ஆளும் பிற மாநிலங்கள் எப்படி இருக்கின்றன? தமிழகம் எப் படி இருக்கிறது?

தமிழகத்தின் முதலாவது முதலமைச்சரில் இருந்து இன்றைக்கு இருக்கின்ற முதல மைச்சர் வரை தீண்டாமைக்கு எதிராக இரும்புக்கரம் கொண்டு நாம் செயல்பட்டி ருக்கிறோம். வேறு வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வர்கள் முதல்வர்களாக இருந் துள்ளனர். ஆனால், இதை குற்றம் சொல்ல பா. ஜ. க. யார்? ஆர். எஸ். எஸ். யார்? தீண்டாமைக்கு அடிப்படை அவர்கள்தான். தீண்டாமையை கட்டி வளர்ப்பவர்களும், நியா யப்படுத்துபவர்களும் அவர் கள்தான்” என்று அவர் கூறி னார். (ஐ)

# மார்ச் 9 இற்குப் பின்னர் பாராளுமன்றத் தேர்தல்

## நடத்தவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்கிறார் பீரிஸ்



**கொழும்பு, பெப். 14**

**திட்டமிட்டபடி மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் பாராளுமன்ற தேர்தலுக்கு அரசாங்கம் நிர்பந்திக்கப்படலாம் என பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

தேர்தல் நடத்துவது தொடர்பில் மக்கள் மத்தியில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்த பலமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் என்பதோடு அதன் முடிவுகள் பெரிய அலையை ஏற்படுத்தும்.

இதன் மூலம் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் பாராளுமன்றம் கலைக்கப்படலாம். மிகுந்த தயக்கத்துடன் பாராளுமன்றத் தேர்தலை நடத்த அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படும்.

மக்கள் ஆணையின்றி நாடு எதிர்கொள்ளும் எந்தவொரு பிரச்னைக்கும் நிலையான தீர்வுகளைக் காண முடியாது.

எவ்வித மக்கள் ஆணையும் இல்லாமல் ஆட்சியில் நீடிக்க அரசாங்கத்துக்கு உரிமை இல்லை-என்றார். (அ)

# சீனா நெருங்கிய நண்பன் இந்தியாவுடனும் நல்லுறவு

## வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, பெப். 14

இலங்கையின் நெருங் கிய நண்பனான சீனாவு டன் எப்போதும் கைகோர்த்து செயற்படுவோம் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

எவ்வாறாயினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியாவுடன் தற்போதுள்ள உறவுகளைச் சீர்குலைக்கப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

கொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் இந்திய ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே வெளிவிவகார அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

நாகரீகத்தின் ஒரு பகுதியாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வலுவான பிணைப்பு காணப்படுகின்றது என்றும் சுட் டிக்காட்டினார்.

இருப்பினும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயற்பாடும் இலங்கைக்குள் இடம்பெற அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அலி சப்ரி தெரிவித்தார். (அ)

# மின்சார கட்டணத் திருத்தத்துக்கு எதிரான மனு விசாரிக்கப்படுமா?

கொழும்பு, பெப். 14

மின் கட்டண திருத்தம் தொடர்பாக அமைச்சரவை தீர்மானத்தை இரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரிக்க அனுமதி வழங்குவதா, இல்லையா என்பது தொடர்பில் எதிர்வரும் 17ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மின் நுகர்வோர் சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் நீதி மையம் சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நேற்று சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மின்சார சபை உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், மின் கட்டண திருத்தம் தொடர்பான அமைச்சரவை முன்மொழிவுகளை நீதிமன்றில் முன்வைத்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்து, சம்பந்தப்பட்ட மனுவை விசாரிக்க அனுமதிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் 17ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 11 இலட்சம் பெண்களிடம் சாரதி அனுமதிப் பத்திரம்

கொழும்பு, பெப். 14

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கோடியே 27 இலட்சத்துக்கும் அதிகமான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களில் 11 இலட்சத்து 22,418 பேர் பெண்கள் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் கனரக வாகனங்களை ஓட்டக்கூடிய பெண்கள் 2,082 பேர் உள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வசந்த ஆரியரத்ன தெரிவித்தார்.

டிசெம்பர் 31, 2010 வரை, இலங்கையில் 23,488 பெண்கள் மட்டுமே சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுள்ளனர், ஆனால் 2020 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரங்களை பெறும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த தசாப்தத்தில் மாத்திரம் 943,749 பேர் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுள்ளதாகவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மாணவனின் உயிரை பறித்த நீச்சல் தடாகம்!

கொழும்பு, பெப். 14

மஹரகம நகரசபைக்குச் சொந்தமான நீச்சல் தடாகத்தில் நீராடிக்கொண்டிருந்த ஐந்து இளைஞர் களில் பாடசாலை மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெயன்துடுவ - மாபிம - பியகம வீதியைச் சேர்ந்த திதுல ரஷ்மிக என்ற 17 வயதுடைய பாடசாலை மாணவரே இவ்வாறு உயிரிழந்துள் ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு நண்பர்களுடன் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு உயிரி ழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# மாணவரின் கவனத்தை ஈர்த்த முத்திரை, நாணயக் கண்காட்சி

## இளவாலை எழுச்சியகத்தில் சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், பெப். 14

முத்திரை மற்றும் நாணயக் கண்காட்சி இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தின் எழுச்சியகம் நிறுவனத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.

ஆலய அருட்பணிச் சபை மற்றும் புனித ஞானப்பிரகாசியார் மன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த முத்திரை கண்காட்சி முன்னெடுக்கப்பட்டது.

இதனை 400 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் வாமணனின் முத்திரைகள் மற்றும் நாணயங்களே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டன.

80 நாடுகளின் முத்திரைகள், 65 நாடுகளுக்கும் மேற்பட்ட நாணய குற்றிகள் மற்றும் நாணயத் தாள்கள் இவ்வாறு காட்சிப் படுத்தப்பட்டன.

1996ஆம் ஆண்டில் இருந்து அவர் முத்திரைகள் மற்றும் நாணயங்களை சேகரிப்பதை தனது பொழுதுபோக்காக செய்து வருவதாக தெரிவித்தார்.

இந்த கண்காட்சி மூலம் மாணவர்களைத் தேவையற்ற இலத்திரனியல் உலகில் இருந்தும் அநாவசிய செயற்பாடுகளில் இருந்தும் சற்று விலக்கிப் பயனுள்ள பொழுது போக் கில் ஈடு படுத்துவது நோக்க மாக உள்ளது.





இக் கண்காட்சியை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

ஆலய அருட்பணிச் சபை செயலாளர் இ. மத்தியூஸ் டியோனி, பொருளாளர் சூ.அன்ரன் செல்வராஜ் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர். (அ)

# மலையகத்தில் கடும் வெப்பம்

கொழும்பு, பெப். 14

கடந்த சில நாட்களாக மத்திய மலைநாட்டில் கடுமையான வெப்பம் நிலவி வருகிறது. இதனால் நீர் தேக்கப் பகுதிகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை வழங்கும் பிரதான நீர் தேக்கமான மவுஸ்சாக்கலை நீர் தேக்கதின் நீர் மட்டம் நேற்று மதியம் வரை அதன் கொள்ளளவை விட சுமார் 19 அடி குறைந்த நிலையில் உள்ளது.

கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான ஆகிய நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை வழங்கும் பிரதான நீர் தேக்கம் இதுவாகும் என நீர் மின் நிலைய உயர் அதிகாரி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 21 அடி குறைந்த நிலையில் உள்ளது. இந்த வரட்சி தொடருமானால் மின் வெட்டு ஏற்படும் அபாயத்தை இலங்கை வாழ் மக்கள் அனுபவிக்க நேரிடும் - என்றார். (அ)

# மலையகத் தமிழர்கள் குறித்து இந்திய அவதானம் வேண்டும்!

## மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, பெப். 14

"இந்தியாவை எந்த கட்சி ஆள்கிறது என்பது இந்திய உள் விவகாரம். அதில் நாம் தலையிடோம். இப்போது ஆள்கின்ற கட்சி உங்கள் பாரதீய ஜனதா கட்சி. மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை, மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை இணை அமைச்சர் எல். முருகன் மற்றும் பாரதீய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் கே. அண்ணாமலை ஆகிய நீங்கள் இருவரும் உங்கள் கட்சியின் இரண்டு பிரதான ஆளுமைகள்.

உங்கள் கட்சி, அரசாங்கம் சார்பில் நீங்கள் இருவரும், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பில் அதிக அவதானம் காட்டவேண்டும். தொப்புள் கொடி உறவுகளான எம்மீது, இந்தியாவின் குறிப்பாக இந்திய மத்திய அரசாட்சி கட்சியான பாரதீய ஜனதா கட்சியின் அக்கறை இன்னமும் கணிசமாக அதிகரிக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் எதிர்பார்க்கிறோம்."

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்த அமைச்சர் முருகன் மற்றும் அண்ணாமலை ஆகியோருக்கும், இலங்கை அரசியல் சமூக தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பை இந்திய தூதரகம் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தது.

அமைச்சர் முருகன், பா.ஜ.க தமிழக தலைவர் அண்ணாமலை, இந்தியத் தூதுவர் கோபால் பாகலே, அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், கோபியோ இலங்கை கிளைத் தலைவர் குமார் நடேசன், வர்த்தகர் கோபால்சாமி ஆகியோரும் கலந்துகொண்ட இச்சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது:

தென் தமிழக மாவட்டங்களான திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் இருந்து சரியாக 1823 ஆண்டு முதல் இலங்கைக்கு ஆங்கிலேயரால் கொண்டுவரப்பட்டு, இன்றைய 2023 இல் 200 ஆண்டுகளை இலங்கையில் நிறைவு செய்யும் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பில் உங்கள் அரசும், நாடும் மிக அதிக அக்கறையை கொள்ள வேண்டும் என நான் கோருகிறேன்.

1964ஆம் ஆண்டின் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் எம்மை இந்நாட்டில் பலவீனப்படுத்தி விட்டது. இந்த ஒப்பந்தம் நடைபெற்று, நமது மக்கள் நாடு கடத்தப்பட்டு இருக்கா விட்டால், இன்று இலங்கை பாராளுமன்றத்தில் சுமார் 25 மலையக தமிழ் எம்.பிக்கள் இருந்திருப்போம். வடகிழக்கு தமிழ் எம்.பிகளுடன் சேர்த்து சுமார் 50 தமிழ் எம்.பிக்கள் அரசியல் பலத்துடன் இலங்கையில் இருந்திருக்கவேண்டிய நிலைமையை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இல்லாமல் செய்து விட்டது.



அந்த சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் எஞ்சியவர்களுக்கு இலங்கை முழு குடியுரிமை வழங்க வேண்டும். இன்று சட்டப்படி குடியுரிமை இருக்கிறது. ஆனால், காணி, கல்வி, வீட்டு, சுகாதார உரிமைகள் இந்நாட்டின் ஏனைய குடிமக்களுக்கு சமானமாக எமது மக்களுக்கு இல்லை. ஆகவே, முழு குடியுரிமை இல்லை.இதற்காகவே நாம் ஜனநாயகரீதியாக இலங்கைக்கு உள்ளே போராடுகிறோம். இதை இலங்கை அரசுக்கு வலியுறுத்தி பெற்று தர வேண்டிய கடப்பாடு இந்திய மத்திய அரசுக்கு இருக்கிறது.

எங்கள் மக்கள் எழுச்சி அடைய முதல் தேவை, கல்வி எழுச்சி ஆகும். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை இடைநிலை, க.பொ.த சாதாரண தர, உயர் தர, வகுப்புகளில் எமது பிள்ளைகளுக்கு தமிழ் மொழியில் போதிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. இதற்காக உங்கள் நாட்டு ஆசிரியர்கள் இங்கே வந்து எமது பாடசாலைகளில் கற்பிப்பதை இந்நாட்டு ஆசிரிய தொழில் சட்டங்கள் ஏற்காது. நமது ஆசிரிய பணி விண்ணப்பதாரிகளை நாம் இந்தியாவுக்கு அனுப்பமாட்டோம்.

ஆகவே ஒரே வழி, மலையக தமிழ் மக்களுக்கான விசேட ஒதுக்கீட்டு கொள்கையின் அடிப்படையில், இங்கே ஆசிரிய பயிற்சிகளை நடத்த கலாசாலை ஒதுக்கி தந்து, அதற்கு தமிழகத்தில் இருந்து கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் பாடங்களுக்கான ஆசிரிய பயிற்சிகளை வழங்க பயிற்சியாளர்களை அனுப்புவதாகும். இந்த திட்டத்தை உங்கள் அரசு உடன் செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இதற்கான உள்நாட்டு அனுமதிகளை, கட்டமைப்புகளை இலங்கை ஜனாதிபதியுடன் பேசி நாம் செய்து தருவோம்- என்றார். (அ)

# தலதா மாளிகை பற்றி வதந்திகள் பரப்புவோரை கைது செய்யுங்கள்!

கொழும்பு, பெப். 15

தலதா மாளிகை மற்றும் மகாநாயக்கர்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் பதிவிடும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அஸ்கிரிய பீடாதிபதி வரகாகொட ஞானரதன தேரர், மல்வத்து பீடாதிபதி திப்பொடுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல ஆகியோர் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சில குழுக்கள் சமூக ஊடகங்கள் ஊடாக அடிப்படையற்ற மற்றும் தீங்கிழைக்கும் கருத்துக்களை பரப்பி வருவதாக பொலிஸ் மா அதிபருக்கு, அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் அனைவருக்கும் எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின்படி, தலதா மாளிகை மற்றும் மத வழிபாடுகளுக்கு பௌத்த மக்களின் நம்பிக்கை மற்றும் புனிதத்தன்மையை இழிவு படுத்தும் மற்றும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நோக்கத்தில் இந்த பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# மருந்து தட்டுப்பாடுக்கு இன்னும் தீர்வு இல்லை!

கொழும்பு, பெப். 14

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மருந்துப் பற்றாக்குறைக்கு இன்னும் சரியான தீர்வு வழங்கப்படவில்லை எனவும், மருத்துவ சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதார அமைச்சின் மருந்துக் கடைகளிலும் பிராந்திய மருந்துக் கடைகளிலும் மிகக் குறைந்த அளவே மருந்துகள் காணப்படுவதாக அது சுட்டிக் காட்டியுள்ளது.

சுமார் 1,300 வகையான மருந்து வகைகள் உள்ள போதிலும் 140 முதல் 150 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து மூன்று வயது குழந்தை உயிரிழப்பு!

## கரந்தெனிய பகுதியில் சோகம்

கொழும்பு, பெப். 14

வீட்டுக்கு முன்னாலிருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து ஆண் குழந்தை யொன்று பலியான சம்பவம், கரந்தெனிய, மாகொட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மினோத் என்ற 3 வயது குழந்தையே இவ்வாறு பலியாகியுள்ளது.

வீட்டு வளாகத்தில் நேற்று முன் தினம் மாலை குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டு இருந்துள்ளார். திடீரென காணாமல்போன நிலையில், அவரை உறவினர்கள் தேடியுள்ளனர்.

இந்நிலையிலையே வீட்டுக்கு முன்னால் பாதுகாப்பற்ற வகையில் இருந்த கிணற்றில் இருந்து குழந்தையின் சடலமாக மீட்கப்பட்டது. (அ)

# நிலக்கரிக் கப்பலுக்கான தாமத கட்டணம் 3 கோடி?

கொழும்பு, பெப். 14

இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ள நிலக்கரி ஏற்றி வந்துள்ள 14வது கப்பலுக்கு 03 கோடி ரூபாவுக்கு மேல் தாமதக் கட்டணம் செலுத்தவேண்டியுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலக்கரி கப்பல்களுக்கான பணத்தை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், இவ்வாறான காலதாமதமான கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளதாக அதன் தலைவர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இலங்கைக்கு வரவுள்ள பல நிலக்கரி கப்பல்களுக்கு 30 வீத முன்பணம் செலுத்தப்படவில்லை என இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர கூறினார்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் மேலும் பல நிலக்கரி கப்பல்கள் தாமதமாக கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# செலுத்தப்படாத வரிகளை வசூலிக்க தயாராகும் அரசு!

கொழும்பு, பெப். 14

செலுத்தப்படாமல் உள்ள சுமார் 200 பில்லியன் ரூபாய் வரிகளை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்க தயார் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசாங்கம் தயாராக இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டுக் கடவுச்சீட்டு விநியோகம் இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 14

நாட்டிலுள்ள குடிவரவுத் திணைக்கள அலுவலகங்கள் ஊடாக வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவுத் திணைக்களத்தின் இணைய முறைமையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இவ்வாறு கடவுச்சீட்டுகளை வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், தற்போது அதனை சரிசெய்யும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஒருநாள் சேவையின் ஊடாக வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்த நபர்களுக்கு ஸ்பீட் போஸ்ட் ஊடாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# முடிந்தால் 100 பேரை அழைத்துவந்து கூட்டமொன்றை நடத்திக் காட்டுங்கள்

## பீரிஸூக்கு தினேஷ் குணவர்த்தன சவால்

கொழும்பு, பெப். 14

"முடிந்தால் 100 பேரை அழைத்துவந்து கூட்ட மொன்றை நடத்திக் காட்டுங்கள்."

- இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸூக்கு சவால் விடுத்துள்ளார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன.

"உள்ளாட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு மொட்டு கட்சியினருக்கு வேட்பாளர்கள் இல்லை என சிலர் கூறினர். ஆனால் ஆட்சியின் இருப்பு மொட்டு கட்சி வசம்தான் என்பது அவர்களுக்கு புரிவதில்லை. ஏசி அறையில் இருந்து கொண்டுதான் பீரிஸ் கருத்துகளை வெளியிடுகின்றார். முடிந்தால் 100 பேரை அழைத்துவந்து கூட்டமொன்றை நடத்தட்டும்."

- எனவும் பிரதமர் குறிப்பிட்டார். (அ)



# போராட தயாராகும் 40 தொழிற்சங்கங்கள்

கொழும்பு, பெப். 14

இந்த வாரத்துக்குள் வரிக் கொள்கைதிருத்தப்படாவிட்டால் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்க நாற்பது தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய, மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், வங்கிகள் உள்ளிட்ட அனைத்து சேவைகளையும் சேர்ந்த வல்லுநர்கள் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளதால், வேலைநிறுத்தத்தின் ஊடாக மாத்திரமே கோரிக்கைகளை வென்றெடுக்க முடியுமென தெரிவித்துள்ளனர். வேலைநிறுத்தம் நடைபெறும் திகதி அடுத்த வாரம் தீர்மானிக்கவுள்ளதாக அறிய முடிகிறது.

வரிக் கொள்கையை மாற்றப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளு மன்றத்தில் தெரிவித்தமை கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளதோடு, வரிக் கொள்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள கருத்து முரண்பாடான கருத்துக்களை உருவாக்கும் எனவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# அந்நிய செலாவணி கையிருப்பு 2 பில்லியன் டொலரை எட்டியது

கொழும்பு, பெப். 14

ஜனவரியில் இலங்கை அந்நிய செலாவணி கையிருப்பு இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

பல இறுக்கமான நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டு வருவாய் என்பனவற்றின் அடிப்படையில், இலங்கையின் அந்நிய செலாவணி நிலைமை, படிப்படியாக முன்னேற்றம் அடைந்துள்ளது.

புதுப்பிக்கப்பிட்ட தரவுகளின் அடிப்படையில், கடந்த ஜனவரி மாதத்தில் நாட்டின் அந்திய செலாவணியின் இருப்பு 2 ஆயிரத்து 120 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்படுகின்றது.

எனினும், அதில் 1.4 பில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையாக காணப்படும் சீனாவின் யுவாங்கை பயன்படுத்துவதற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

கடந்த டிசெம்பர் மாதத்தில் 1,898 மில்லியன் அமெரிக்க டொலராக நாட்டின் அந்திய செலாவணி கையிருப்பு காணப்பட்ட நிலையில், அதில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்நிய செலாவணி கையிருப்பு கடந்த ஆண்டு பூஜ்ஜிய நிலையில் காணப்பட்டதாக கூறப்படுவதுடன், அத்தியாவசியமற்ற பொருட்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை, வங்கிகள் வட்டி விகிதங்களை அதிகரித்தமை, சுற்றுலாத்துறையின் மறுமலர்ச்சி என்பன மீண்டும் அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரித்தமைக்கான பிரதான காரணிகளாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ)

# 30 ஆயிரம் ஆசிரியர்கள் நாட்டில் பற்றாக்குறை!

## ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 14

பாடசாலைகளில் சுமார் 30,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அச்சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், கல்வியியற் கல்லூரிகளில் பயிற்றப்பட்ட சுமார் 8,000 பேர் வெளியேறியுள்ளனர். எனினும், அவர்களை முறையாக பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான உரிய திட்டம் கல்வி அமைச்சிடம் இல்லை என்று கூறினார்.

# மா ஓயா ஆற்றில் பாய்ந்த மாணவர்!

கொழும்பு, பெப். 14

நீர்கொழும்பு - கொச்சிக்கடை - தோப்புச் சந்தி பகுதியில் பாடசாலை மாணவர் ஒருவர் மா ஓயா ஆற்றில் பாய்ந்த நிலையில் காணாமல் போயுள்ளார்.

நேற்று முற்பகல் குறித்த மாணவர் ஆற்றில் பாய்ந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மடபெல்ல - அகரகம பகுதியை சேர்ந்த 17 வயது டைய மாணவர் ஒருவரே இவ்வாறு ஆற்றில் பாய்ந்துள்ளார்.

பிறிதொரு மாணவரின் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசியை சேதப்படுத்தினார் என காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கான கட்டணத்தை தவணை முறையில் செலுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில், சேதப்படுத்திய கையடக்க தொலைபேசிக்கான தவணைக் கட்டணத்தை செலுத்த வீட்டிலி ருந்து வெளியேறியதன் பின்னரே இவ்வாறு ஆற்றில் பாய்ந்துள்ளார்.

ஆற்றில் பாய்ந்த மாணவரை தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அஞ்சல்மூல வாக்குச் சீட்டுகள் புதன்கிழமை முதல் விநியோகம்

கொழும்பு, பெப். 14

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்குச் சீட்டுகள் அடங்கிய பாதுகாப்பு முத்திரையிடப்பட்ட பொதிகளை நாளை மறுதினம் முதல் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வாக்களிப்பை எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த திகதிகளில், வாக்களிக்க முடியாதவர்கள் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியின் முன்னிலையில் தமது அஞ்சல் மூல வாக்கினை பதிவு செய்ய முடியும்.

அத்துடன், உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 36 000 அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு குறைப்பாடுகள் காரணமாக குறித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க கூறினார்.(அ)

# ஜே.வி.பிக்கு அதிகாரம் வழங்குவதால் ஆபத்து!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, பெப். 14

உள்ளூராட்சிசபைத் தேர்தலானது அரசாங்கத்தை மாற்றி ஜனாதிபதியை மாற்றக்கூடிய தேர்தல் அல்ல என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டையே தீயிட்டு கொளுத்தி மக்களைக் கொல்லும் அளவுக்கு கடுமையான மனநிலை கொண்ட ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு அதிகாரம் வழங்குவது மிகவும் ஆபத்தானது என அமைச்சர் மேலும் கூறுகிறார்.

கம்பஹாவில் நடைபெற்ற கம்பஹா மாவட்ட ஆட்சி வேட்பாளர் கூட்டங்களில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இயற்கை சீற்றம், போர் போன்ற பல்வேறு காரணங்களால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. மிக மோசமான காலம் கொவிட் வந்த காலமே. எனவே, எங்களிடம் கை இருப்புக்கள் தீர்ந்தபோது, எரிவாயு மற்றும் எண்ணெய் கொண்டு வர டொலர்கள் இல்லை.

94 இல் நாம் வெற்றி பெற்றபோது மக்களை துன்புறுத்தவில்லை. ஆனால், கடந்த மே 9ஆம் தேதி எங்கள் வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டதற்கு என்ன காரணம்? எனது வீட்டிற்கு தீ வைக்கப்பட்ட வீடியோக்கள் அனைத்தும் என்னிடம் உள்ளன. எனது வீட்டுக்கு தீ வைத்தது வேறு யாருமல்ல ஜே.வி.பியினரே. மினுவாங்கொடையில் நடைபெற்ற ஜே.வி.பி கூட்டத்தின் முதல் பேச்சாளர் வீடு எரிப்புக்கு தலைமை தாங்கியவர். அவரைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டேன். ஜே.வி.பி மணி சின்னம் மற்றும் திசைகாட்டி சின்னத்துடன் வந்து தான் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. எனது வீடு மட்டுமல்ல எனது செயலாளரின் வீடும் எரிக்கப்பட்டது. ஜே.வி.பிக்கு போலித்தனமும் பொறா மையும் மட்டுமே உள்ளது. இராணுவச் சீருடையில் கொள்ளையடித்து துரத்தப் பட்ட ஒருவர் இன்று மினுவாங்கொடை மாநகரசபைக்கு திசைகாட்டி சின்னத்தில் வாக்கு கேட்கின்றார். திசைகாட்டியில் வாக்கு கேட்பவர்களை பற்றி இன்று முகநூலில் பேசப் படுகின்றது.

ஜே.வி.பி விமர்சனங்களைத் தவிர வேறு எதையும் செய்யாத கட்சி. தீ வைக்கும் உயிர்களை கொல்லும் மனநிலை கொண்ட ஒரு கூட்டத்திற்கு அதிகாரம் கொடுப்பது ஆபத்தான விஷயம். அதிகாரத்தைப் பெற எத்தனை ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்? ஆட்சிக்கு வந்து ஆட்சியை தக்கவைக்க எத்தனை ஆயிரம் மக்கள் தொலைந்து போவார்கள்? இந்த தேர்தல் அரசாங்கங்களை கவிழ்க்கக் கூடிய அல்லது ஜனாதிபதியை மாற்றக் கூடிய தேர்தல் அல்ல.

அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது. பாராளுமன்றத்தை கைப்பற்றி ஜனநாயகத்தை கவிழ்த்து அரசாங்கம் அழிந்தால் இன்று நாம் எங்கே இருப்போம் என்று கற்பனை செய்து பாருங்கள். அமைதியான போராட்டத்தை ஏற்கிறோம். மன அழுத்தம் உள்ள மக்கள் போராடுவது எங்களுக்கு தெரியும். ஆனால் நீர்த் தடாகத்தில் விழுந்து குளிக்கும் மனப்பான்மை கொண்டவர்கள் இந்த நாட்டைக் கைப்பற்றினால் என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

நாடு அராஜகமாக மாறியபோது, இந்த நாட்டைக் கைப்பற்ற வருமாறு அநுரகுமாரை அழைத்தோம். சஜித் பிரேமதாஸவை வந்து இந்த நாட்டை கைப்பற்றுங்கள் என்றோம். கட்சி என்ற ரீதியில் அன்றி பதவிகளை ஏற்கவில்லை. இந்தப் பொருளாதாரப் பேரழிவில் இருந்து மீண்டு வர உதவுமாறு கேட்டோம். இதை ஏற்க அனைவரும் பயந்தனர். இதனை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார். நாடு கையகப்படுத்தப்பட்டு பொருளா தாரத்தை நிர்வகித்து, இருந்த நிலையில் இருந்து நாட்டை ஒரு குறிப்பிட்ட இடத் திற்கு கொண்டு வந்துள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானம் நடை முறைப் படுத்தப்படும் போது, இந்த நாட்டை சிறந்த நிலைக்கு கொண்டு வர முடியும். இன்று இந்தியாவும் சீனாவும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன. ஆனால் இது நாம் எதிர்பார்ப்பது அல்ல. இந்த நாட்டின் உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தை உயர் மட்ட நிலைக்கு கொண்டு வருவதற்கு நாம் உழைக்கவேண்டும். இதனால்தான் நான் பிரபலமான முடிவுகளை எடுக்க முடியாது என்று ஜனாதிபதி கூறுகிறார். மக்கள் மனப்பான்மையிலிருந்து விலகி நாட்டில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதாகக் கூறுகிறார். அதற்கு நாங்கள் முழு ஆதரவை வழங்குகிறோம்

- என்றார். (அ)

# நான் ஏன் எழுதுகின்றேன்?



அ.ந.கந்தசாமி

**எழுத்தாளர் அ.ந.கந்தசாமி அவரது பன்முகப் புலமை காரணமாக அறிஞர் அ.ந.கந்தசாமி என்றழைக்கப்பட்டார். இலங்கை முற்போக்குத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளிலொருவர். சமூக, அரசியல் செயற்பாட்டாளராகவும் விளங்கிய அ.ந.கந்தசாமி அவர்கள் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர். சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், விமர்சனம், மொழிபெயர்ப்பு என இலக்கியத்தின் பல்துறைகளில் ஆற்றல் மிக்கவராக விளங்கியவர் அ.ந.க. அவரது நினைவு தினம் பெப்ரவரி 14. அவர் 14.2.1968 மறைந்தபோது தேசாபிமானி பத்திரிகை வெளியிட்ட நினைவிதழில் மீள் பிரசுரமான அ.ந.க.வின் கட்டுரை இக்கட்டுரை இது.**

அப்பொழுது எனக்குப் பதினேழு வயது நடந்து கொண்டிருந்தது. உள்ளத்திலும் உடம்பிலும் சுறுசுறுப்பும், துடிதுடிப்பும் நிறைந்த காலம். உலகையே என் சிந்தனையால் அளந்து விட வேண்டுமென்று பேராசை கொண்ட காலம். காண்பதெல்லாம் புதுமையாகவும், அழகாகவும், வாழ்க்கை ஒரு வானவில் போலவும் தோன் றிய காலம். மின்னலோடு உரையாடவும், தென்றலோடு விளையாடவும் தெரிந்திருந்த காலம். மின்னல் என் உள் ளத்தே பேசியது. இதயத்தின் அடியில் நனவிலி உள்ளத் தில் புகுந்து கவிதை அசைவுகளை ஏற்படுத்தியது. பல நாள் உருவற்று அசைந்த இக்கவிதா உணர்ச்சி ஒருநாள் பூரணத்துவம் பெற்று உருக்கொண்டது. எழுத்தில் வடித்தேன். 'சிந்தனையும் மின்னொளியும்" என்ற தலைப் பில் இலங்கையின் ஒப்புயர்வற்ற இலக்கிய ஏடாக அன்று விளங்கிய 'ஈழகேசரி'யில் வெளிவந்தது. இக்கவிதை ஒரு காரியாலயத்தில் மேசை முன்னுட்கார்ந்து என்னால் எழுதப்பட்டதல்ல. இயற்கையோடொன்றிய என் மனதில் தானே பிறந்த கவிக்குழதை இது. எனினும் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இலக்கிய சித்தாந்தங்கள் பலவற்றை ஆராய்ந்து நான் என்மனதில் ஏற்றுக் கொண்ட அதே கருத்துகளின் சாயலை இக்கவிதையில் என்னால் இன்று காண முடிகிறது.

மனோதத்துவ அறிஞர் மனதை நனவிலி மனம், நனவு மனம் என்று இரு கூறுகளாகப் பிரிக்கின்றனர். ஆங்கிலத்தில் இவற்றை முறையே Sub Conscious Mind, Conscious Mind என்று குறிப்பார்கள். 'நான் ஏன் எழுதுகிறேன்?" என்ற கேள்விக்கு நனவு மனத்திடம் பதில்பெற முடியாது. ஏனெனில் நனவு மனத்தை விட சக்திவாய்ந்தது நனவிலி மனம் என்பதே மன இயல் அறிந்தவர் முடிவு. கவிதை பெரும்பாலும் நனவிலி மனதில் உருவாகி நனவு மனத்தின் வழியாகப் பிரவாகிக்கும் ஒன்றாகும். பின்னால் நான் ஏற் றுக்கொண்ட கருத்துகள் இக் கவிதையை எழுதிய நாளில் என் நனவிலி மனதில் துளிர்த்திருந்தவை தாம் என்பதையே இக்கவிதையில் நான் வலியுறுத்தும் தத்துவங்கள் இன்று எனக்குணர்த்துகின்றன.

இக்கவிதை எனது முதலாவது கவிதையல்ல. இதற்கு முன்னரே கல்லூரிச் சஞ்சிகையில் ஒன்றிரண்டு கவிதைகளை நான் எழுதியிருந்தேன். இருந்தாலும் இது என் ஆரம்ப இலக்கிய முயற்சிகளில் ஒன்று. எனவே 'நான் ஏன் எழுதுகிறேன்?, எழுதினேன்?" என்பதற்கு இக்கவிதை யில் பதில் காண முயற்சிப்பது பொருத்தமானதேயாகும்.

இக்கவிதையின் சில வரிகள் நினைவில் மிதந்து வருகின்றன.

"...கொட்டும் இடிதாளம் இசைய
நடம் செய்யும்
மட்டற்ற பேரழகு வான் வனிதை
போல் மின்னல்
தோன்றி மறைந்ததுவே.
சிந்தனையின் தரங்கங்கள் ஊன்றி
எழுந்தன.
இவ் ஒளி மின்னல் செயல் என்னே!
வாழ்வோ கணநேரம்!
கணநேரந்தானும் உண்டோ?
சாவும் பிறப்பு அந்தக்
கணநேரத்தடங்குமன்றோ? ....."

மின்னலின் வாழ்வு கணநேரம். ஆனால் அக்கண நேரத்தில்:

'..சூழும் இருள் நீங்கும்.
சுடர் விளக்குப் போலிங்கு
சோதி கொழுத்திச்
சோபிததைச் செய்து விட்டு
ஓடி மறைகிறது...."

இம்மின்னல் எனக்குணர்த்தும் செய்தி என்ன? 'சில நாட்களே நீ இவ்வுலகில் வாழ்ந்தாலும் மக்களுக்கும், உலகுக்கும் பயனுள்ளவனாக வாழ். இன்று நீ இருக்கிறாய். நாளை இறந்து விடலாம். ஆகவே நன்றே செய்க. அதையும் இன்றே செய்க" இது தான் மின்னல் சொல்லித் தரும் பாடம்.

இருளை விரட்டி ஒளியைப் பரப்பும் மின்னல் சமுதா யத்தில் சூழ்ந்துள்ள மடமை, வறுமை முதலான இருள் களை நீக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் பரப்பும்படி எனக்குப் பணித்தது. வாழ்க்கையையே இதற்காக அர்ப் பணிக்கவேண்டும் என்ற ஆசை மேலிட்ட நான் என் எழுத்தையும் அத்துறைக்கே பயன்படுத்த வேண்டும் என்று நினைத்ததில் வியப்பில்லை அல்லவா?

மனிதன் சமுதாயத்தின் ஒரு அங்கம். அவனுக்கு சமுத ாயப் பொறுப்பொன்று உண்டு. வெறுமனே உண்ணுவ தும், உறங்குவதும், புலனுகர்ச்சிகளில் ஈடுபடுவதும் வாழ்க்கையாகாது. அறிவு



வளர்ச்சி பெற்ற மனிதன் இவற் றோடு வேறு சில காரியங்களையும் செய்ய விரும்புவான். மற்றவர் முகத்தின் புன்னகை தோட்டத்தில் பூத்துக் குலுங் கும் முல்லைமலர் போல் அவனுக்கு இன்பத்தை யூட்டும். 'இன்று நாம் வாழும் சமுதாயத்தில் நாம் புன்னகையைக் காணவில்லை. துன்பமும், துயரமும், அழுகையும், ஏக்கமும், கண்ணீரும், கம்பலையுமாக நாம் வாழுமுலகம் இருக்கிறது. ஏழ்மைக்கும், செல்வத்துக்கும் நடக்கும் போரும், அடிமைக்கும், ஆண்டானுக்கும் நடக் கும் போரும், உயர்சாதியானுக்கும் தாழ்ந்த சாதியானுக் கும் நடக்கும் போரும், அசுரசக்திகளுக்கும், மனித சக்தி களுக்கும் நடக்கும் போரும் இன்று உலகையே கலங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. இப்போர்களினால் வாழ்வே ஒரு சோககீதமாகிவிட்டது. இப்போர்களை எவ்வளவு விரைவில் ஒழிக்க முடியுமோ அவ்வளவு விரை வில் ஒழித்துவிட வேண்டும். அதன் பின்தான் போரொ ழிந்த சமத்துவ சமுதாயம் பூக்கும். அதைப் பூக்க வைக்கும் பணியில் எழுத்தாளன் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்ற கருத்தை உலகின் புகழ்பெற்ற பேனா மன்னர்கள் என் மனதில் தோற்றுவித்தனர்.

பிரெஞ்சுப் புரட்சி கண்ட ரூசோ, வால்டயர் தொடக் கம் மார்சிம் கோர்க்கி, எஹ்ரென்பேர்க் வரைக்கும் எல்லா நல்ல எழுத்தாளர்களும் இந்தச் செய்தியையே எனக்குக் கூறினர். பேர்னாட் ஷாவின் எழுத்துகளும் இன்றைய பேட்ரண்ட் ரசல் எழுத்து களும் கூட சமுதாய முன்னேற் றத்துக்குரிய பிரச்சினைகளுக்குத் தீர்ப்பு காணும் பணியை அலட்சியம் செய்துவிடவில்லை. வங்கக் கவிஞர் தாகூ ரும், தமிழ்க் கவிஞன் பாரதியும் தாம் வாழ்ந்த சமுதாயத் தின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பணிக்குத் தமது பேனாக்களை அர்ப்பணம் செய்ய மறக்கவில்லை.... உலகப் பண்பாட்டுப் பாடிய பாரதிதாசனும் சமுதாய ஊழல்களைச் சுட்டெரிக்கும் பணிக்குத் தன்னாலான சேவையைச் செய்திருக்கின்றான்.

'மக்கள் இலக்கியம்" என்ற கருத்தும் "சோஷலிஸ்ட் யதார்த்தம்" என்பனவுமே என் மனதைக் கவர்ந்த இலக்கிய சித்தாந்தங்களாக விளங்குகின்றன. எழுத்தாளன் வாழ்க் கையை விமர்சிப்பதுடன் நின்று விடக்கூடாது. அந்த விமர்சனத்தின் அடிப்படையில் வாசகர்களுக்கு எதிர் காலத்தில் நம்பிக்கை ஊட்டவேண்டும். அவ்வித நம்பிக் கையில்லாவிட்டால் முன்னேற்றமில்லை. வாழ்வே இல்லை. இவ்வித பிரக்ஞையில் பிறக்காமல் வெறுமனே யதார்த்தத்தை ஒரு சுத்த இலட்சியமாகக் கொண்டு எழு தும்போது நம்பிக்கைக்குப் பதில் அவநம்பிக்கையின் தொனிகளே கேட்க ஆரம்பிக்கலாம். நைந்த உள்ளத்தின் சோகக்குரலாகக் கேட்கும் எழுத்தால் பயனில்லை. நொந்த உள்ளத்தின் செயல் துணிவுகொண்ட வேகக் குரலாக அது ஒலிக்க வேண்டும். வாழ்வதற்கு நேரடியாகவோ, குறிப்பா கவோ, மௌனமாகவோ வழிகாட்டும் எழுத்தே எழுத்து. இந்தக் கருத்துகள் என்னை உந்துகின்றன. அவற்றுக்கா கவே நான் எழுதுகின்றேன். ●

# 13ஆவது திருத்தம் தொடர்பில் அவசியமில்லாத அமளி



ஜாவிட் யூசுவ்

இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதை நோக்கிய செயன்முறைகளின் முதற்படியாக அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் தனது நோக்கம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கெனவே வெளியிட்ட அறிவிப்பு கடந்த வாரம் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை தொடக்கிவைத்து அவர் நிகழ்த்திய கொள்கை விளக்கவுரையின் முக்கியத்துவத்தை குறைத்து விட்டது.

அரசியலமைப்பு ஏற்பாடு ஒன்றை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதற்காக ஜனாதிபதி ஏன் கண்டனத்துக்கு உள்ளாகிறார் என்று விளங்கவில்லை. அந்த கண்டனங்கள் சகலவிதமான நியாயங்களையும் மீறியதாக இருக்கின்றன. அரசியலமைப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதுவதற்காக அல்ல நடைமுறைப்படுத்தாமல் விடுவதற்காகவே அரசாங்கங்கள் மீது குற்றஞ்சாட்டப்படுவது வழமை. உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதை தவிர்ப்பதற்கு தற்போதைய அரசாங்கம் முயற்சிப்பதாக தெரிவிக்கப்படும் கணிசமான குற்றச்சாட்டுக்களை இதற்கு உதாரணமாக கூறலாம்.

ஆனால், 13 வது திருத்தத்துக்கு எதிராக கிளம்பியிருக்கும் தரப்புக்களை நோக்கும்போது அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கடந்த காலத்தில் இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளை எதிர்த்தவர்களே இப்போதும் வீதிகளுக்கு இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதே சக்திகள் பல மாதங்களாக மக்கள் உணவு வகைகள், எரிபொருட்கள் மற்றும் மருந்துப்பொருட்களுக்கு நிலவிய கடுமையான தட்டுப்பாட்டினாலும் வானளாவ உயர்ந்த வாழ்க்கைச் செலவினாலும் சொல்லொணா கஷ்டங்களை அனுபவித்தபோது சத்தம்போடாமல் அமைதியாக இருந்தன.

13 வது திருத்தத்துக்கு எதிராக போர்க்கொடி தூக்குபவர்கள் அதன் நடைமுறைப்படுத்தல் நாட்டுப் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற ஒரு பூச்சாண்டியையே பிரதானமாக காட்டுகிறார்கள்.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தினரின் மனங்களில் பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்துவதற்கு அறிவுபூர்வமான வாதங்களில் அல்ல வெறும் சுலோகங்களிலேயே பெரும்பாலும் தங்கியிருக்கிறார்கள். இது அவர்கள் 13 வது திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் ஒரு மேலோட்டமான பரிச்சயத்தைக் கொண் டிருக்கிறார்கள் என்பதை காட் டுகிறது. ஆட்சேபங்கள் சுலோகங்களுக்குள் பொதிந்திருக்கும் போது அந்த திருத் தம் தொடர்பில் மக்களுக்கு இருக்கக்கூடிய உண்மையான எந்தவொரு அச்சம் குறித்தும் நாகரிகமான கலந்துரையாடலை நடத்துவது கஷ்டமானதாகும்.



இதற்கு மாறாக, 13 வது திருத்தத்தை கடுமையாக எதிர்ப்பவரும் அது தொடர்பில் கிரமமாக ஊடகங்களில் எழுதிவருபவருமான நெவில் லடுவஹெட்டி மக்களுக்கு இருக்கக்கூடிய அச்சங்களை உரியமுறையில் கையாளக்கூடிய முறையில் தனது அக்கறைகளை வெளிப்படுத்தியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களின் உணர்வுகள் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்கவுரை மீதான விவாதத்தின்போது பாராளுமன்றத்திலும் எதிரொலித்தன. பாராளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவன்சவும் உதய கம்மன்பிலவும் 13 வது திருத்தம் தொடர்பிலான ஜனாதிபதியின் நகர்வு மீதான தாக்குதலின் முன்னரங்கத்தில் நின்றனர்.

ஜனாதிபதியின் யோசனை தொடர்பில் தனது முன்னைய கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) எடுத்திருக்கும் நிலைப்பாட்டை தாக்குவதற்கு அந்த சந்தர்ப்பத்தை விமல் வீரவன்ச பயன்படுத்திக்கொண்டார். ஆனால், இனநெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்கான ஒரு வழிமுறையாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 13 பிளஸ் பற்றி பேசிய போது அவரின் அரசாங் கத்தில் முக்கிய மான அமைச்சராக இருந்த வீரவன்ச தனது அச்சங்களை ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை.

**எந்தவொரு அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் அங்கீகாரத்தை மாத்திரமல்ல, சிங்கள சமூகத்தின் அங்கீகாரத்தையும் பெறவேண்டியது அவசியமானது என்று சம்பந்தன் திரும்பத்திரும்ப வலியுறுத்திவருவது கவனிக்கத்தக்கது.**

விவாதத்தில் பங்கேற்று உரயாற் றிய பவிதுறுஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பி னர் உதய கம்மன்பில தனது வாதத்துக்கு ஆதரவாக கிழக்கு திமோர் அனுபவத்தை முன்வைத்தார். 13ஆவது திருத்தம் நாட்டுப் பிரிவி னைக்கு வழிவகுக் கும் என்று கூறிய அவர் இந்தோனேசிய பின்புலத்துக்கும் இலங்கைப் பின்புலத் துக்கும் இடையில் எத்தகைய ஒற்றுமைகள் இருக் கின்றன என்பதை விளக்கிக் கூற தவறவிட்டார்.



இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான மாகாணங்கள் விரும்பினால் இணைந்து கொள்வதற்கு அனுமதிக்கும் இலங்கை அரசியலமைப்பின் ஏற்பாட்டை சுட்டிக் காட்டிய கம்மன்பில அவ்வாறான இணைப்பு ஏற்படும் பட்சத்தில் பிரிவினைக்கு சாத்தியம் இருப்ப தாக கூறினார். ஆனால் மாகாணங்கள் இணைவதற்கு எடுக் கக்கூடிய எந்தவொரு தீர்மான மும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக் கப்பட வேண்டும் என்பது கவனிக்கத்தக் கது.

13 வது திருத்தத்தின் முழு மையான நடைமுறைப்படுத்தல் குறித்து ஆட்சேபனைகளைக் கொண்டி ருப்பவர்கள் தங்களது அச்சங்களை எழுத் துமூலம் ஜனாதிபதிக்கு சமர்ப்பித்திருக்க முடியும். பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வாறு செய்யுமாறு ஜனாதிபதி முன்கூட்டியே கேட்டிருந்தார்.

13 வது திருத்தம் தொடர்பில் இருக்கக்கூடிய எந்த அச்சத்தையும் சுலோகங்களை எழுப்புவதன் மூலமோ அல்லது வீதிகளில் அச்சுறுத்தல்களை விடுப்பதன் மூலமோ அல்ல பேச்சுவார்த்தை மூலம் மாத்திரமே கையாளமுடியும்.

அதிகாரப்பரவலாக்கத்தின் விளைவாக பிரிவினை ஏற்படும் என்ற அச்சம் குறித்து நல்லாட்சி அரசாங்க காலத்தில் அரசியலமைப்பு சபையின் கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்பட்டது.

எந்தவொரு அரசியலமைப்பு ஏற்பாடும் பிளவுபடாத நாட்டொன்றின் அடிப்படையிலேயே அமையவேண்டும் என்றும் எந்தவொரு மாகாணமும் பிரிவினைவாதப் போக்குகளை வெளிப்படுத்தினால் தலையீடு செய்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படும் என்றும் அன்றைய அரசங்கமும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பும் இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தன.

எந்தவொரு அரசியலமைப்பு மாற்றமும் வெற்றிகரமானதாகவும் நிலைபேறானதாகவும் அமைய வேண்டுமென்றால், சமுதாயத்தின் சகல பிரிவுகளினதும் சம்மதத்தை நிச்சயம் பெறவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. உண்மையில், எந்தவொரு அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் அங்கீகாரத்தை மாத்திரமல்ல, சிங்கள சமூகத்தின் அங்கீகாரத்தையும் பெறவேண்டியது அவசியமானது என்று சம்பந்தன் திரும்பத்திரும்ப வலியுறுத்திவருவது கவனிக்கத்தக்கது.

13 வது திருத்தம் தமிழ்ச் சமூகத்தின் தேவைகளை போதுமானளவுக்கு நிறைவேற்றுமா என்பது சந்தேகமே. ஆனால் அந்த திருத்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பரவலாக்கப்படக்கூடிய அதிகாரங்களுடன் தமிழ் அரசியல் தலைமைத்துவம் திருப்திப்படுமானால், அதற்கு குறுக்கே நிற்பதில் அர்த்தமில்லை.

(சண்டே ரைம்ஸ், 12 பெப்ரவரி 2023)

# பிரதமர் செயலர், சுகாதார பணிப்பாளராக வடக்கை சேர்ந்தவர்களை நியமியுங்கள்!

## ஜனாதிபதியிடம் விக்னேஸ்வரன் நேரில் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 14

வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு சுகாதார பணிப்பாளர் பதவிகளில் உள்ளவர்களை மாற்றி, வடக்கை சேர்ந்தவர்களை நியமிக்கும்படி ஜனாதிபதியிடம் கோரினார் என்று தமிழ் மக்கள் கட்சியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி ரணிலின் யாழ்ப்பாண சுதந்திர தின நிகழ்வுக்கு எதிராக யாழ். நகரில் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தபோது அந்த பகுதியை கடந்து சென்று, ஜனாதிபதியை சந்தித்திருந்தார் விக்னேஸ்வரன். அந்த சந்திப்பு குறித்து அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள தகவலில் -

கடந்த 11ஆம் திகதி ஜெட் விங் ஹோட்டலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், வடக்கு ஆளுநரையும் சந்தித்து பேசினேன். நான் கோரிய விடயங்கள் தொடர்பில் தான் செயல்பட்டு வருகிறார் எனவும் சிறிது கால அவகாசம் தேவை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் கோரிக்கைகள், இராணுவத்தினரால் காணிகளை விடுவித்தல் போன்றவற்றை அவர் குறிப்பிட்டார் என நான் நம்புகிறேன்.

தன்னுடன் இணைந்து பணியாற்ற தமிழர்களின் உதவியைப் பெறுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். கடந்த வருடத்திற்கு முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் ஏக பிரதிநிதியாக பாராளுமன்றத்துக்கு வந்த போதும் அவர் அவ்வாறு கூறியிருந்தார்.

நான் அவரிடம் பரிசீலிக்கக்கேட்ட மற்ற விசயங்கள் -

புலம்பெயர் மக்களால் முதலீடுகளுக்கு உத்தரவாதம். பிரிட்டன் போன்ற சில நாடுகளுடன் முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தங்கள் உள்ளன என்றும், அந்த நாடுகளில் இருந்து விண்ணப்பித்தால் முதலீடுகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் அந்த ஒப்பந்தங்களின் கீழ் பலன்களை பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

சிங்கப்பூர் மற்றும் மலேசியாவுக்கு விமானம் தொடங்குதல். அதற்கான பணிகளில் ஈடுபட்டு வருவதாக அவர் கூறினார். பலாலியில் இருந்து கொழும்புக்கான விமானத்தை ஆரம்பிப்பது. விமானம் ஹிங்குருக்கொடை வழியாக செல்ல வேண்டும் என்று அவர் கூறினார். இதுவரை விமானம் சீனக்குடா வழியாக சென்றதை நான் சுட்டிக்காட்டினேன். பரிசீலிப்பதாக கூறினார்.

வட மாகாண பிரதம செயலாளர் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளரை மாற்றுதல், அவர்களுக்குப் பதிலாக மாகாணத்தில் உள்ள மூத்தவர்களை அந்த பணிகளில் நியமித்தல். மீண்டும், அவர் அதைப் பரிசீலிக்க ஒப்புக்கொண்டார். திணைக்களங்களால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். காலனித்துவ திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட அல்லது அரசால் எடுக்கப்பட்ட மற்றும் திருப்பியளிக்கப்பட்ட காணிகள் தொடர்பான சர்வதேச சட்டத்தின்படி முன்னுரிமை அப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டினேன். அவர் ஒப்புக்கொண்டார். வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களை தடுக்க சட்டத்தை கண்டிப்பாக மாற்றுவார்.

காங்கேசன்துறையில் உள்ள “மகிந்த மாளிகை” தொடர்பாக, சுமந்திரன் மற்றும் என் முன்னிலையில், முன்னாள் ஜனாதிபதி சிறிசேன, வடமாகாண சபைக்கு வழங்க இணங்கியதாக நான் சுட்டிக்காட்டினேன். கட்டடத்தைச் சுற்றியுள்ள காணிகள் தனியார் தரப்பினருக்கு சொந்தமானது, அவர்களிடமே திருப்பித் தரப்படும் என்றார் ஜனாதிபதி. மேலும் இந்தக் கட்டிடத்திற்கு சேர். பொன்னம்பலம் இராமநாதனின் பெயரைச் சூட்டலாமென்றார். அவர் வட மாகாண சபைக்கு வழங்குவதாக உறுதியளிக்கவில்லை.

காங்கேசன்துறை-காரைக்கால் மற்றும் தலைமன்னார் படகு சேவை குறித்து விவாதிக்கப்பட்டது. சேவைகளை நடத்த யாராவது வந்தால் தனியாருக்கு வழங்குவது குறித்து பரிசீலிப்பதாக அவர் கூறினார். பலாலி - சிங்கப்பூர் விமானம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அவர் அதை பரிசீலிக்கிறார். நடவடிக்கைகளை எடுப்பார்.

மாகாண அபிவிருத்தி பத்திரங்களை மக்கள் கொள்வனவு செய்து மாகாணத்தின் அபிவிருத்திக்கு உத்வேகம் அளிக்கக்கூடிய வகையில் மாகாண அபிவிருத்தி பத்திரங்களை உருவாக்கு மாறு நான் பரிந்துரைத்தேன்.

மாகாணங்களின் பணிகளில் மத்திய அரசு தலையிடுவதைத் தடுக்கும் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு வரும் மற்ற விஷயங்களைக் குறிப்பிட்டார். கூட்டாட்சி அரசியலமைப்பை வழங்காமல், தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் பயனுள்ள அதிகாரப் பகிர்வை வழங்குவதே அவரது எண்ணமாகத் தெரிகிறது. பயனுள்ள அதிகாரப் பகிர்வுக்கான சட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார். அவர் மகாவலி சட்டங்களை வெளியே எடுப்பது பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை திறம்பட கட்டுப்படுத்த சட்டங்களைக் கொண்டுவருவதில் அவர் உறுதியாக இருந்தார். ஒட்டுசுட்டானில் ஓடு, பரந்தன் இரசாயன தொழிற்சாலையை திறப்பது தொடர்பாக முதலீடு செய்யுமாறு அவர் தனியார் துறைக்கு அழைப்பு விடுக்க உள்ளார்.

பனை அபிவிருத்திச் சபைக்கு சிங்களவர் ஒருவர் தலைமை தாங்குவது அவருக்குத் தெரியாது. திக்கம் தொழிற்சாலை செயல்படும். பல்வேறு சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் தமிழ் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்படும் என்றும் அவர் கூறினார்.

2017ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கிற்கு வெளியில் உள்ள ஏழு மாகாண சபைகளின் முதலமைச்சர்களினால் தயாரிக்கப்பட்ட ஆவணம் ஒன்று இருப்பதாகவும் அதனை நான் பார்க்க வேண்டும் என்று உள்ளது. (ஐ)

கல்வி tv CHANNEL-1

**14.02.2023**

**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**14.02.2023**

**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நாட்டில் மாகாண சபை முறை தோல்வியை தழுவும் அபாயம்!



## முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் எச்சரிக்கை

**அம்பாறை, பெப். 14**

**"இலங்கையில் மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமை தோல்வியைத் தழுவிக் கொண்டது போல், மாகாண சபை முறைமையும் தோல்வியைத் தழுவும் அபாயமே உள்ளது. பௌத்த பிக்குமார் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் இதற்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது." -இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், முன்னாள் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் தெரிவித்தார். தவிசாளர் அப்துல் மஜீத் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.**

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரத்தை பெற்றுக்கொண்டபோதிலும் 1972ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி சுதந்திரக் குடியரசாக மாறியது. அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு சாசனம் சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை முழுவதுமாக புறந்தள்ளி சிங்கள பௌத்த மேலாண்மையை வலியுறுத்தி நின்றது.

குறிப்பாக சோல்பரி அரசியல் யாப்பில் இடம்பெற்றிருந்த செனட் சபை (மூதவை) இல்லாதொழிக்கப்பட்டதுடன் பௌத்த மதத்தை அரச மதமாகவும், சிங்கள மொழியை அரசகரும மொழியாகவும் பிரகடனம் செய்திருந்தது .

சிறுபான்மை மக்களின் உரிமைகளை மறுத்து அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக மாற்றும் அக்குடியரசு சாசனத்தை தமிழ் மக்கள் எதிர்த்து நின்றதுடன் அப்போது நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் அமிர்தலிங்கம் பகிரங்கமாக அரசியலமைப்பை தீயிட்டுக் கொளுத்தினார். இதன் விளைவாக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அதுபோல் கடந்த 8ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அக்கிராசன உரையை உரையாற்றிக் கொண்டிருக்கையில், பௌத்த பிக்குமார் பாராளுமன்றை நோக்கி ஆர்ப்பாட்டமாக சென்றதுடன் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை தீயிட்டுக் கொளுத்தினர். அவர்களை பொலிஸார் கைது செய்ய முன்வரவில்லை. பொலிஸாரின் அச் செயலானது நாட்டில் இரண்டு சட்டங்கள் உள்ளது என்னத் தோன்றுகிறது.

1957ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கான பிற்குமார் பிரதமரின் இல்லத்திற்கு முன்பாக சத்தியாக்கிரகம் இருந்தனர். இதனால் வேறு வழியின்றி அவ் ஒப்பந்தம் கிழித்து வீசப்பட்டது. 1965இல் ஏற்படுத்தப்பட்ட டட்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து அன்றைய எதிர்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர், டட்லியின் தலைக்குள் "மஸாலா வடே" என்ற கோசத்தை முன்னெடுத்துச் சென்றதுடன் அவ் ஒப்பந்தத்தை தோல்வியடையச் செய்தனர்.

இனப் பிரச்னைக்குத் தீர்வாக 1981ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமை தோல்வியைத் தழுவிக் கொண்டது போல் மாகாண சபை முறைமையையும் தோல்வியடையச் செய்வதற்கு பௌத்த சிங்கள கடும்போக்குவாதிகள் முயன்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

அரசியலமைப்பிற்கான 6ஆவது திருத்தச் சட்டம் 1983 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டது. அச்சட்டமானது நாட்டுக்குள் பிரிவினை கோருவதை தடுத்து நிற்கிறது. அச்சட் டத்தை ஏற்றுக்கொள்வதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் மறுத்ததனால் அவர்களின் பாராளுமன்ற உறுப்புரிமை வரி தாக்கப்பட்டது. இதன் காரண மாக அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் உட் பட 18 பேர் பதவியிழந்தனர். இன்று பாராளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் பலர் அரசியலமைப்பு சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்க மறுப்பதனால் அவர்கள் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியுமா என்ற கேள்வி தற்போது எழுந்து நிற்கின்றது.

13ஆவது திருத்தம் என்பதும் அதிகாரப் பகிர்வு என்பதும் தமிழ் மக்களுக்கே உரித்தான சொந்த விடயம் என முஸ்லிம் சமூகத்தில் பலர் நம்பிக்கை கொண்டுள்ளனர். அது அவர்களின் அரசியல் அறியாமையை பிரதிபலிக்கின்றது. அதிகாரப் பகிர்வு என்பது வடக்கு-கிழக்கிற்கு மாத்திரமன்றி அதற்கு வெளியே உள்ள 7 மாகாண சபைகளும் உள்ளது என்பதனை விளங்கிக் கொள்வதும், விசேடமாக சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளையும், பிராந்திய அபிவிருத்தியையும் அவர்களது வாழ்விடங்களை உறுதிப்படுத்துவதும் அதில் தங்கியுள்ளது என்பதை அனைவரும் விளங்கிக் கொள்வது நன்று-என்றார். (அ-06)

# மண்டூரில் தியாகிகள் நினைவு

அம்பாறை, பெப். 14

"தியாகிகளை நினைவு கூருவோம் அவர்தம் உறவுகளைக் கௌரவிப்போம்" எனும் தலைப்பில், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) வருடாந்தம் நடத்திவரும் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை மண்டூரில் நடைபெற்றது.

ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் உயிர்நீத்த தியாகிகளை நினைவு கூர்ந்தும், அவர்தம் உறவுகளை நினைவு கூர்ந்தும், உறவுகளைக் கௌரவித்து உணர் பூர்வமாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

கிழக்கிலங்கை மண்டூர் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பாளர் க. சின்னத்துரை தலைமையில், மண்டூர் சிறீ இராம கிருஷ்ண கலாசார மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு - அம்பாறை பிராந்திய ஏற்பாட்டுக் குழுவினால் மண்டூர் வலய ரீதியாக ஏற்பாடு செய் யப்பட்ட இந்த நிகழ் வில் பெருமளவிலான தியாகிகளின் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன், பிரதேச முக்கியஸ்த் ர்கள் மற்றும் முன்னணியின் முக்கியஸ்த்தர்களும் கலந்து கொண்டனர்.

அரசியல் உயர்பீட உறுப்பினர் சர்மாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வில், காரைதீவு அறங்காவலர் ஒன்றியத்தலைவரும், காரைதீவு கண்ணகியம்மன் ஆலய தர்மகத்தாவுமான இரா.குணசிங்கம், தியாகி தோழர் பிராரனின் சகோதரி திருமதி. இ.கலாதேவி, தோழர் மதன் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர்.



மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற நிகழ்வில் மறைந்த கட்சியின் செயலாளர் தியாகி தோழர் க.பத்மநாபாவின் உருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மறைந்த தியாகிகளுக்காக இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

(அ-06)

# பலசரக்குக் கடைகளில் திடீர்ப் பரிசோதனைகள்



அம்பாறை, பெப். 14

காரைதீவு பிர தேசத்தில் உள்ள பல சரக்கு கடைகளில் உணவு மாதிரிகளை சோதிக்க திடீர் பரி சோதனைகள் நடத்தப்பட்டது.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் இந்த திடீர் பரிசோதனையை மேற்கொண்டார்கள்.

சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஜமீல் தலைமையிலான சுகாதார பரிசோதகர்கள் இந்த பரிசோதனையில் ஈடுபட்டார்கள். சுமார் ஐந்து கடைகள் பரி சோதனை குழுவினரின் பரிசோ தனைக்கு இலக்காகின.

உணவுப் பொருட்களின் மூன்று உணவு மாதிரிகள் பெறப்பட்டு ஒன்று சோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(அ)

# சமூக நலன்புரி திட்டத்துக்கு தரவுகள் சேகரிப்பு ஆரம்பம்!

அம்பாறை, எப். 14

அரசாங்கத்தின் புதிய திட்டமான சமூக நலன்புரி சேவை திட்டத்தின் கீழ் நாடெங்கிலும் உள்ள பிரதேச செயலக பிரிவுகளில் நிகழ்நிலை மூலம் பயனாளிகளின் தரவுகள் சேமிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களில் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு மாதாந்தம் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படவுள்ளது.

அந்த அடிப்படையில் திருக்கோவில் பிரதேசத்தில் விண்ணப்பிக்கப்பட்ட 7430 பயனாளிகளுக்கான தரவுகளைப் பெறுவதற்கான ஒன்லைன் வேலைத்திட்டம் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் வழிகாட்டலில் உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரனின் தலைமையில் இந்த ஒன்லைன் நிகழ்ச்சி திட்டம் காஞ்சிரங்குடா கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காஞ்சிரங்குடாவில் உள்ள 140 குடும்பங்களில் நேற்று 15 குடும்பங்கள் இந்த நிகழ்நிலை ஒன்லைன் தரவு சேகரிப்பிற்கு உள்ளாகின.

பயனாளிகள் தொடர்பாக அநேக விடயங்கள் ஒன்லைன் சேகரிப்பில் உள்வாங்கப்படவிருப்பதால் இந்த வேலைத் திட்டம்

சுமார் மூன்று மாதங்கள் இடம்பெறலாம் என்று உதவி பிரதேச செயலாளர் சதீஸ் தெரிவித்தார்.

(அ)

# புளியடிச்சோலை பகுதியில் ஒருவர் அடித்துக் கொலை!

திருமலை, பெப். 14

மூதூர்-புளியடிச் சோலை கிராமத்தில் நேற்று முன்தினம் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபர் அதே கிராமத்தைச் சேர்ந்த முத்துசாமி கோகிலராசா (வயது 48) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரு நபருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பை ஏற்படுத்தியதாகவும் இதனால் படுகாயத்துக்கு உள்ளான குறித்த நபர் சிகிச்சைக்காக கிளிவெட்டி பிரதேச வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற நிலையில் மரணித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# நியூஸிலாந்தை மிரட்டும் புயல்!

## 58,000 வீடுகளுக்கு மின்சாரம் தடை

வெலிங்டன், பெப்.14

நியூஸிலாந்தின் வடக்கே தாக்கிய கேப்ரியல் புயலால் சுமார் 58,000 வீடுகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தொடர்ந்து அங்கு கனமழை மற்றும் காற்று வீசும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நூற்றுக்கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கேப்ரியல் புயல், வடக்கு தீவுக்கு அருகில் நிலைக்கொண்டிருப்பதால், சில பகுதிகளில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஒக்லாந்து மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் வரலாறு காணாத மழையால் பாதிக்கப்பட்ட சில வாரங்களுக்குப் பிறகு, ஏற்பட்ட வெள்ளத்தால் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டின் வரலாற்றில் மூன்றாவது தடவையாக தேசிய அவசரகால நிலையை பிரகடனப்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக அவசரகால முகாமைத்துவ அமைச்சர் கீரன் மெக்அனுல்டி தெரிவித்தார்.

ஒக்லாந்து உட்பட ஐந்து வடக்கு பிராந்தியங்களில் ஏற்கனவே அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு உள்ளூர் அதிகாரிகளுக்கு ஆபத்தான சூழ்நிலைகளுக்கு பதிலளிக்க அதிக அதிகாரத்தை அளிக்கிறது மற்றும் பயணத்தை கட்டுப்படுத்தவும் உதவிகளை வழங்கவும் அனுமதிக்கிறது.

ஒக்லாந்தின் வடக்கே உள்ள நகரமான வாங்கரேயில் கடந்த 12 மணி நேரத்தில் 100.5 மிமீ (4 அங்குலம்) மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு நிறுவனம் மெட்சர்வீஸ் தெரிவித்துள்ளது.

(அ)

## துருக்கி - சிரியா நிலநடுக்கம்

# பலியானோர் எண்ணிக்கை 34 ஆயிரத்தைத் தாண்டியது!



அங்காரா, பெப்.14

துருக்கி மற்றும் சிரியாவை நிலைகுலைய செய்த அதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டு இன்றுடன் ஒரு வாரம் ஆகிறது. இரு நாடுகளிலும் அழுகுரலும், மரண ஓலமும் ஓய்ந்தபாடில்லை.

கொங்கிரீட் குவியல்களுக்குள் இருந்து அள்ள அள்ள பிணங்கள் கிடைப்பதால் பலி எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் உயர்ந்து வருகிறது.

அந்த வகையில் இரு நாடுகளிலும் நிலநடுக்கத்துக்கு பலியானோர் எண்ணிக்கை 34 ஆயிரத்தை கடந்துவிட்டது. 92 ஆயிரத்துக்கு அதிகமானோர் காயம் அடைந்துள்ளனர்.

பலியானவர்களில் துருக்கியில் மட்டுமே 29 ஆயிரத்துக்கும் அதிகமான உயிர்கள் பறிபோனதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் சிரியாவில் வெள்ளிக்கிழமைக்கு பிறகு பலியானோர் எண்ணிக்கை குறித்த விவரங்கள் வெளியாகவில்லை.

அங்கு கடைசியாக வெளியான தகவலின் படி நிலநடுக்கத்துக்கு சுமார் 4 ஆயிரம் பேர் உயிரிழந்ததாக தெரிகிறது.

(அ)

# 4ஆவது மர்மப்பொருளையும் சுட்டு வீழ்த்தியது அமெரிக்கா!



நியூயோர்க், பெப்.14

இந்த மாதம் நான்காவது ராணுவ நடவடிக்கையில், அடையாளம் தெரியாத மற்றொரு பறக்கும் பொருளை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கனேடிய எல்லைக்கு அருகில் உள்ள ஹூரோன் ஏரிக்கு அருகில் அதை வீழ்த்துமாறு ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டார்.

இந்த பொருள் 20,000 அடி (6,100 மீற்றர்) உயரத்தில் பயணித்ததால் வணிக விமானப் போக்குவரத்தில் தலையிடக்கூடும் என்று பென்டகன் அறிக்கை தெரிவித்துள்ளது.

இது சனிக்கிழமையன்று மொன்டானாவில் உள்ள இராணுவ தளங்களுக்கு மேலே கண்டறியப்பட்டது.

இராணுவ அச்சுறுத்தலாக கருதப்படாத இந்த பொருள், பாதுகாப்பு அதிகாரிகளால் ஆளில்லா மற்றும் எண்கோண வடிவமாக விபரிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி 14:42 மணிக்கு எவ்-16 போர் விமானத்திலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையால் இந்த பொருள் வீழ்த்தப்பட்டது.

இச்சம்பவம் இந்த மாதம் வட அமெரிக்காவில் சுட்டு வீழ்த்தப்பட்ட உயரமான பொருட்களைப் பற்றி மேலும் கேள்விகளை எழுப்பியது.

சந்தேகத்திற்கிடமான சீன உளவு பலூன், கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி தென் கரோலினா கடற்கரையில் அமெரிக்கக் கண்டத்தில் பல நாட்கள் வட்டமிட்ட பின்னர் வீழ்த்தப்பட்டது.

இது சீனாவில் தோன்றியதாகவும், உணர்திறன் வாய்ந்த இடங்களைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், இந்த பொருள் உளவு பார்க்க பயன்படுத்தப்பட்டதை மறுத்த சீனா, இது வானிலை கண்காணிப்பு சாதனம் என்றும், தவறாக வீசப்பட்டதாகவும் கூறியது.

இந்த சம்பவம் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றத்தை ஏற்படுத்திய நிலையில், முதல் பொருள் பற்றி அறிந்துக் கொள்ள சீனாவுடன் அமெரிக்கா தொடர்புக் கொண்டதாக அதிகாரியொருவர் தெரிவித்தார். எனினும் இதன்போது என்ன விடயம் கலந்துரையாட அல்லது விவாதிக்கப்பட்டது என்பது குறித்த அவர் கருத்து கூறவில்லை.

(அ)

# ஜேர்மனிய உறவினர்களுடன் தங்குவதற்கு பாதிக்கப்பட்ட துருக்கி - சிரிய மக்களுக்கு அனுமதி!



பேர்ளின், பெப்.14

துருக்கி மற்றும் சிரியாவில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஜேர்மனியில் உள்ள உறவினர்களுடன் தற்காலிகமாக தங்க அனுமதிக்கப்படுவார்கள் என ஜேர்மனி அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது அவசர உதவி என்று ஜேர்மன் உள்துறை அமைச்சர் நான்சி பேசர் தெரிவித்துள்ளார்.

துருக்கிய அல்லது சிரிய குடும்பங்கள் பேரழிவு பகுதியில் இருந்து தங்கள் நெருங்கிய உறவினர்களை அதிகாரத்துவம் இல்லாமல் ஜேர்மனியர்கள் தங்கள் வீடுகளுக்கு அழைத்து வர அனுமதிக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் காயம் அடைந்தவர்களுக்கு காஸா மக்கள் ரத்த தானம் வழங்கி வருகின்றனர்.

மேலும், பிபா உலகக் கிண்ணத் தொடரின் போது பயன்படுத்தப்பட்ட 10,000 கபின்கள் மற்றும் கரவன்களை துருக்கி மற்றும் சிரியாவுக்கு கட்டார் அனுப்பவுள்ளது.

சக்தி வாய்ந்த நிலநடுக்கங்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ)

# உக்ரைனில் அதிகளவில் உயிரிழக்கும் ரஷ்ய படை!



கீவ், பெப்.14

உக்ரைனில் கடந்த வாரங்களை விட நடப்பு வாரத்தில் ரஷ்ய இராணுவ வீரர்களின் உயிரிழப்பு அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது குறித்து உக்ரைனிய தேசிய பாதுகாப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், உக்ரைனுடன் நடக்கும் போரில் நாள் ஒன்றுக்கு 824 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

தங்களது தரப்பு வீரர்கள் ரஷ்யாவின் தாக்குதலை வலுவாக எதிர்கொண்டு முறியடித்து வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போரைத் தொடங்கிய போது இந்த எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 1000இற்கும் அதிகமாக இருந்ததும், பின்னர் வெகுவாகக் குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

### மகளிர் ஐ. பி. எல். ஏலம்

# ரூ. 15.3 கோடிக்கு ஸ்மிருதியை வாங்கியது பெங்களூர் அணி!

மும்பை, பெப். 14

முதலாவது மகளிர் ஐ. பி. எல். தொடரில் இந்திய அணி வீராங்கனையான ஸ்மிருதி மந்தனாவை 3.4 கோடி இந்திய ரூபாய்க்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 15.3 கோடி ரூபாய் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி வாங்கியுள்ளது.

தென்னாபிரிக்காவில் தற்போதுள்ள இந்திய மகளிர் அணி இந்த ஏலத்தை நேரலையாக பார்த்தது. அவருக்கு சக இந்திய வீராங்கனைகள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

மும்பையில் நடைபெறும் இந்த ஏலத்தில் முதல் வீராங்கனையாக ஸ்மிருதி பெயர் அறிவிக்கப்பட்டது. அவரது அடிப்படை விலை ரூ. 50 இலட்சம். மும்பை அணி முதலாவது அணியாக ஏலத்தில் அவரை வாங்க விருப்பம் தெரிவித்தது.

இருந்தபோதும் பெங்களூர் அணி நிர்வாகம் தொடர்ந்து ஏலம் கேட் டது. இரு தரப்பும் விடா மல்



ஏலம் கேட்க, இறுதி யில் பெங்களூர் அணி ஸ்மிருதியை வாங்கியது.

கடந்த 2013இல் 16 வயதில் சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் அறி முகமானவர் ஸ்மிருதி. அதி ரடி தொடக்க வீராங்கனை யான அவர் சர்வதேச இரு பது - 20 கிரிக்கெட் டில் 112 போட்டிகளில் 2,651 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இந்திய அணி சார்பில் அதிவேக அரைச்சதம் பதிவு செய்துள்ள வீராங்கனை. மகளிர் பிக் பாஷ் லீக், இங்கி லாந்தில் நடைபெறும் மகளிர் லீக் தொடர்களில் விளை யாடி உள்ளார். இதுவரையான இந்த ஏலத்தில் அதிக தொகைக்கு வாங்கப்பட்ட வீராங்கனையாக ஸ்மிருதி உள் ளார். அணியை தலைமை தாங்கும் திறனும் கொண்டவர்.



### மகளிர் உலகக் கிண்ணம்:

# பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது இலங்கை!

கேப்டவுன், பெப். 14

பங்களாதேஷ் மகளிர் அணியை 7 விக்கெட்களால் வீழ்த்தியது இலங்கை மகளிர் அணி. இந்த வெற்றியின் மூலம் அரையிறுதிக்கான வாய்ப்பை இலங்கை அணி அதிகப்படுத்தியுள்ளது.

ஐ. சி. சி. மகளிர் இருபது - 20 உலகக் கிண்ணம் தென்னாபிரிக்காவில் நடக்கிறது. இதில், நேற்று முன் தினம் போட்டியில் பங்களாதேஷ் - இலங்கை அணிகள் மோதின.

இலங்கையின் வெற்றிக்கு பங்களாதேஷ் 127 ஓட்டங் களை நிர்ணயித்தது. இலங்கை அணியின் ஆரம்ப வீராங் கனை ஹர்ஷிதா சமர விக்ரம, மத்திய வரிசை வீராங் கனை நிலஷ்டி சில்வா ஆகிய இருவரும் நிதானம் கலந்த வேகத்துடன் துடுப்பெடுத்தாடி பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டில் 104 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றியை உறுதிசெய்தனர்.

முன்னதாக, அணித் தலைவி சமரி அத்தபத்து (15), விஷ்மி குணரட்ன (1), அனுஷ்கா சஞ்சீவனி (0) ஆகி யோரின் விக்கெட்களை மருபா அக்தர் வீழ்த்த 6ஆவது ஓவரில் இலங்கை 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது.

ஆனால், ஹர்ஷிதா சமரவிக்ரமவும் நிலக்ஷி டி சில்வாவும் மிகவும் திறமையாக ஆடினார். ஹர்ஷிதா சமரவிக்ரம 50 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், ஒரு சிச்ஸர் உட்பட 69 ஓட்டங்களுடனும் நிலக்ஷி டி சில்வா 38 பந்துகளில் 41 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பங்களாதேஷ் பந்துவீச்சில் மருபா அக்தர் ஒரு ஓட்ட மற்ற ஓவர் உட்பட 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது ஓவரில் மர்ஷிதா காத்துன் (0) ஆட்டமிழந்தபோது அதன் மொத்த எண்ணிக்கை 8 ஓட்டங்களாக இருந்தது. எனினும் மற்றைய ஆரம்ப வீராங்கனை ஷமிமா சுல்தானா (20), சோபனா மோஸ் தரி (29), அணித் தலைவி நிகார் சுல்தானா (28) ஆகிய மூவரும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி பங்களா தேஷை பலப்படுத்தினர். (9.5 ஓவர்களில் 71 - 3 விக்.)

ஆனால், ஓஷாதி ரணசிங்க, சமரி அத்தப்பத்து, இனோக்கா ரணவீர ஆகியோர் கட்டுப்பாட்டுடன் பந்துவீசி பங்களாதேஷை ஆட்டம் காணச் செய்தனர்.

ஓஷாதி ரணசிங்க 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்க ளையும் சமரி அத்தபத்து 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் களையும் இனோக்கா ரணவீர 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ)

### மகளிர் உலகக் கிண்ணம்:

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது இந்தியா!

கேப்டவுன், பெப். 14

மகளிர் உலகக் கிண்ண இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ் தானை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது.

தென்னாபிரிக்காவின் கேப் டவுன் நகரில் ஞாயிற் றுக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பாகிஸ்தான் 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 149 ஓட்டங்கள் எடுக்க, இந்தியா 19 ஓவர்களில் 3 விக் கெட்கள் இழப்புக்கு 151 ஓட்டங்களை எட்டி வென் றது. இந்தியாவின் வெற்றிக்கு வழி வகுத்த ஜெமிமா ரோட்ரிக்ஸ் ஆட்டநாயகி ஆனார்.

முன்னதாக, வென்ற பாகிஸ்தான் துடுப்பெடுத்தா டியது.

தொடக்க இணைப்பாட்டத்தில் ஜவெய்ரா கான் ஒரு பௌண்ட்ரியுடன் 8 ஓட்டங்கள் சேர்த்து 2-ஆவது ஓவரிலேயே ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த கேப் டன் பிஸ்மா மரூஃப் நிலைத்து நின்று ஓட்டங்கள் சேர்க்கத் தொடங்கினார்.

மறுபுறம் முனீபா அலி ஒரு பௌண்ட்ரியுடன் 12 ஓட்டங்கள் சேர்த்து வெளியேற, நிதா தார் ”டக் அவுட்“ ஆனார். சிட்ரா அமீன் 11 ஓடடங்கள் அடித்து வீழ்ந்தார்.

ஓவர்கள் முடிவில் பிஸ்மா 7 பௌண்ட்ரிகளுடன் 68, ஆயிஷா நஸீம் 2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 43 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்கு 81 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது. இந்திய பந்துவீச்சில் ராதா யாதவ் 2, தீப்தி சர்மா, பூஜா வஸ்த்ரகர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பின்னர் 150 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு ஆடிய இந்திய அணியில், தொடக்க வீராங்கனை யஸ்திகா பாட்டியா 2 பௌண்ட்ரிகளுடன் 17 ஓட்டங் கள் சேர்க்க, உடன் வந்த ஷபாலி வர்மா 4 பௌண்ட்ரிக ளுடன் 33 ஓட்டங்கள் அடித்து பெவிலியன் திரும்பி னார். கடைசி விக்கெட்டாக கேப்டன் ஹர்மன் பிரீத் கௌர் 2 பௌண்ட்ரிகளுடன் 16 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இறுதியில் ஜெமிமா ரோட்ரிக்ஸ் 38 பந்துகளில் 8 பௌண்ட்ரிகளுடன் 53, ரிச்சா கோஷ் 20 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 31 ஓட்டங்கள் விளாசி அணியை வெற்றிக்கு வழி நடத்தினர்.

பாகிஸ்தான் தரப்பில் நஷ்ரா சந்து 2, சாதிக் இக்பால் 1 விக்கெட் கைப்பற்றினர். (ஐ)






# எஸ். ஏ. இருபது - 20 லீக் ஈஸ்டர்ன் கேப் சம்பியன்

கேப்டவுன், பெப். 14

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவந்த எஸ். ஏ. இருபது - 20 லீக் கிரிக்கெட் தொடரில் குசல் மெண்டிஸ் அங்கம் வகிக்கும் பிரிட்டோரியா கப்பிட்டல்ஸ் அணியை 4 விக்கெட்களால் வென்று சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் அணி சம்பியனானது.

6 அணிகள் பங்கேற்றிருந்த இந்தப் போட்டித் தொட ரின் இறுதிப் போட்டிக்கு வெய்ன் பார்னெல் தலை மையிலான பிரிட்டோரியஸ் கப்பிட்டல்ஸ் அணியும், அய்டன் மார்க்ரம் தலைமையிலான சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் அணியும் ஞாயிற்றுக்கிழமை மோதிக் கொண்டன.

ஜொஹனஸ்பேர்க்கில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிரிட்டோரியா கப்பிட் டல்ஸ் அணி 136 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்க ளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பில் குசல் மெண்டிஸ் (21) மாத்திரமே 20 ஓட்டங்களை கடந்த வீரராவார். சன்ரைசர்ஸ் அணி சார்பாக சிறப்பாக பந்துவீசிய ரோஹெலொவ் வென்டர் மேர்வ் 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

137 ஓட்டங்கள் என்ற இலகுவான ஓட்ட இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் அணி 16.2 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 4 விக்கெட்களால் வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான அடம் ரொசிங்டன் 30 பந்து களில் 57 ஓட்டங்களை விளாசினார். இதில் 5 சிக்ஸ ர்களும் 4 பௌண்ட்ரிகளும் அடங்கும்.

பந்துவீச்சில் அண்டிரிச் நோர்ட்ஜே 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

சன்ரைசர்ஸ் அணி சம்பியன் வெற்றிக்கு பெரிதும் பங் காற்றிய ரோஹெலொவ் வென்டர் மேர்வ் போட்டியின் ஆட்ட நாயனாக தெரிவானார்.

இப்போட்டித் தொடரில் 366 ஓட்டங்களை குவித்த துடன், 11 விக்கெட்களை வீழ்த்திய அய்டன் மர்க்ரம் தொடரின் நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# லீக் போட்டிகளிலிருந்தும் இயன் மோர்கன் ஓய்வு!



லண்டன், பெப். 14

தொழில்முறை கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் இயன் மோர்கன். இவர் கடந்த 2019 உலகக் கிண்ணம் வென்ற இங்கிலாந்து அணியின் கப்டனாக செயல்பட்டவர்.

36 வயதான மோர்கன், அயர்லாந்து நாட்டில் பிறந்தவர். 2006 வாக்கில் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானார். அவர் முதன் முதலில் விளையாடிய சர்வதேச கிரிக்கெட் போட்டி அயர்லாந்து அணிக்காகத்தான். 2009 ஏப்ரல் வரை அயர்லாந்து அணிக்காக விளையாடி வந்தார். அதே ஆண்டின் மே மாதம் முதல் இங்கிலாந்து அணிக்காக விளையாட தொடங்கினார். அது முதல் கடந்த ஆண்டு வரையில் இங்கிலாந்து அணிக்காக அவர் விளையாடி இருந்தார்.

கடந்த ஆண்டு ஜூனில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இருந்தாலும் தொழில்முறை சார்ந்த கிரிக்கெட் தொடர்களில் விளையாடி வந்தார். இந்த சூழலில் அதிலிருந்தும் ஓய்வு பெறுவதாக தற்போது அவர் அறிவித்துள்ளார்.


# அன்று தமிழர்களின் வீடுகளை எரித்தவர்கள் இன்று என்னை பதவி நீக்கக் கோருகிறார்கள்

## பல்கலை ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் மீது றுகுணு துணைவேந்தர் பகிரங்கக் குற்றச்சாட்டு!

கொழும்பு, பெப். 14

**1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் போது, ஜே.வி.பிக்காகத் தமிழர்களின் வீடுகளையும், கடைகளையும் எரித்த ஒரு பேராசிரியரே இன்று என்னை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்கிறார்.**

**அவர்கள் பல்கலைக்கழகத்தை வைத்து அரசியல் செய்யப் பார்க்கிறார்கள். வீடற்ற தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்து விட்டு அரசியல் செய்யட்டும் என்று றுகுணு பல்கலைக் கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன தெரிவித்துள்ளார்.**



ருகுண பல்கலைக்கழகத் துணைவேந்தரை ஏழு நாள்களுக்குள் பதவி நீக்கவேண்டும் எனக் கோரி நாடெங்கிலும் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பில் பகிரங்க அறிக்கை மூலம் தெளிவுபடுத்தி அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த றுகுணு பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேனவை உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதி நாடெங்கிலும் உள்ள பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் அடையாளப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

அதேநேரம் றுகுணு பல்கலைக்கழக வெலமடம வளாகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதமர் தினேஸ் குணவர்தன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகளால் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், ஏழு நாள்களுக்குள் துணைவேந்தரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என ஜனாதிபதிக்கு நிபந்தனைக் கடிதமொன்றை அனுப்புவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறி கடந்த 5 ஆம் திகதி தனது அலுவலகத்துக்குச் சென்ற சமயம், அவரது அறையிலிருந்து வழக்கத்துக்கு மாறான மணம் வந்ததாகவும், அது அவரைக் கொலை செய்யும் வகையில் பரவ விடப்பட்ட நச்சு வாயுக் கசிவு என்றும் துணைவேந்தருக்கு எதிரான குற்றச்சாட்டில் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவையனைத்தும் தன்னைப் பதவி நீக்கம் செய்வதற்காக வேண்டுமென்றே சோடிக்கப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ள துணைவேந்தர், தனக்கெதிரான சதியில் முன்னிற்போருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகளையும் முன்வைத்துள்ளார்.

இதேநேரம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தான் மறுப்பதாகத் தெரிவித்துள்ள துணைவேந்தர், றொகான் லக்சிறி, பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி மற்றும் பேராசிரியர் உப்புல் அபேரத்ன ஆகியோர் அரசியல் காரணங்களுக்காகவே என்னைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு பாடுபடுகிறார்கள்.

நான் இந்தப் பல்கலைக்கழகத்துக்கு இரண்டாவது தடவையாகத் திறமை அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுத் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டவன். அரசியல் செல்வாக்கினால் பதவியைப் பெற்றவன் நானல்லன். இங்கு கலாநிதிப் பட்டத்துக்காக நிதியைப் பெற்று விட்டு 13 வருடங்களுக்கு மேல் பணத்தை மீளளிக்காமல் இருப்பவர்களும், ஆராய்ச்சி ஒதுக்கீடுகள் மற்றும் பரீட்சைகளில் மோசடி செய்வோருமே எனக்கு எதிராக என்னைப் பதவி நீக்கம் செய்யத் துடிக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் போது, ஜே.வி. பி க்காகத் தமிழர்களின் வீடுகளையும், கடைகளையும் எரித்த ஒரு பேராசிரியரே இன்று என்னை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்கிறார். அவர்கள் பல்கலைக்கழகத்தை வைத்து அரசியல் செய்யப் பார்க்கிறார்கள். வீடற்ற தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்து விட்டு அரசியல் செய்யட்டும்- என்றார்.

# வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், பெப். 14

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை திருக் குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலய விடுதிகளிலுள்ள வாழ்வாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு மூன்று இலட் சம் ரூபாய் பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளையும் உபகரணங்களையும் நியூசிலாந்தைச் சேர்ந்த சமூக ஆர்வலரான மேர்வின் கொன்ஸ்ரன்ரைன் வழங்கியுள்ளார்.







வன்னி, மலையகம், யாழ். மாவட்டங்களைச் சேர்ந்த இந்த மாணவர்களுக்கு உதவுமாறு இளவாலை சர்வமத ஆன்மீக அறக்கட்டளை அமைப்பின் போஷகரும் சமூகச் செயற்பாட்டாளருமான அருட்பணி. கி. ஜோ.ஜெயக்குமார் அடிகளார் விடுத்த வேண்டுகோளையடுத்து, அவர் இந்த உதவியை வழங்கினார்.

ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.ஏ. கொன்ஸ்ரன்ரைன் நினைவாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இரு பாடசாலைகளிலும் நிகழ்ந்த இந்த நிகழ்வில் அருட்பணி. கி.ஜோ. ஜெயக்குமார் பாடசாலை அதிபர்களான அருட்பணி. மக் மயூரன், அருட்சகோதரி.மரியசீலி, பிரதி அதிபர். அருட்பணி. சுமன் ஆசிரியை திருமதி றொகான் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# சிங்கப்பூரின் லீ குவான் யூபோல் ஜனாதிபதி செயல்படவேண்டும்!

## ரஞ்சன் ராமநாயக்க கோரிக்கை

கொழும்பு, பெப். 14

சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூவின் பாதையில் செல்லுமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், லீ குவான் யூ தனக்கு ஆதரவான பாதாள உலகக் குழுக்களுக்குச் செய்ததைப் போன்று ஜனாதிபதி செய்யவேண்டும் .

பல்வேறு ஊழல்கள் மூலம் இலங்கையை அழித்த திருடர்கள் குழுவால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு கொண்டு வரப்பட்டுள்ளார். திருடர்கள் குழு தமது பாதுகாப்புக்காக ரணில் விக்கிரமசிங்கவை மெய்ப்பாதுகாவலராக அழைத்து வந்துள்ளனர்.

இதேபோலத்தான் ரெட் டிராகன் மற்றும் பிளக் டிராகன் என்ற இரண்டு மாபியா பாதாள உலகக் குழுக்களின் ஆதரவுடன் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஆட்சிக்கு வந்த பிறகு அவருக்கு ஆதரவாக இருந்த மாபியா குழு தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். அவரது வழியில் ரணில் விக்கிரமசிங்க செயல்பட வேண்டும். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு செய்வது சந்தேகத்திற்குரியது - என்றார். (அ)

# தொழிற்சங்க நடவடிக்கை 10 ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, பெப். 14

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கரையோர சேவை உள்ளிட்ட 10 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொல்கஹவெல-மருதானை, மஹவ-கொழும்பு கோட்டை ஆகிய 2 ரயில்கள் இரத்து செய்யப்பட்டன.

ரம்புக்கனை-கொழும்பு கோட்டை மற்றும் குருநாகல் - கொழும்பு கோட்டை, ஹிக்கடுவ-மருதானை, அளுத்கம ஆகிய பல ரயில்களும் இரத்தாகியுள்ளன.

மருதானை மற்றும் களுத்துறை-மருதானைக்கு இயக்கப்படவிருந்த 3 ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டன.

மேலும், புத்தளம் மார்க்கத்தில் ஹலவத்தையில் இருந்து கொழும்பு வரை இயக்கப்படவிருந்த இரண்டு ரயில் பயணங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன. (அ)

# தபால்மூல வாக்களிப்புக்கு சகல ஏற்பாடுகளும் தயார்

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, பெப். 14

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புக்கு தயாராகிவிட்டதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே தபால் மூலம் வாக்களிப்பவர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு விசேட அறிவுறுத்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் வாக்குகளை 22, 23, 24 ஆகிய திகதிகளில் செலுத்த முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த திகதிகளில் வாக்களிக்க முடியாமல் போனால், 28 ஆம் திகதி மாவட்ட தேர்தல் அத்தியட்சகர் முன்னிலையில் செலுத்தலாம் எனத் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

# தடுப்பூசிகளுக்கு பற்றாக்குறை

நாடளாவிய ரீதியில் ரபிஸ் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த வாரத்திற்குள் 20 இலட்சம் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டால் தடுப்பூசிகளின் இருப்பு அடுத்த வருடத்தின் நடுப்பகுதி வரை போதுமானதாக இருக்கும் என சுகாதார அமைச்சின் பொது சுகாதாரம் மற்றும் கால்நடை சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

## காதலர்...

என்றும் ஆயுர்வேத திணைக்களத்தின் வைத்தியர் பி.தரங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று அவர் ஊடகங்களுக்கு தகவல் அளிக்கையில்,

கஞ்சா கலந்த சொக்லேட்கள் காதலர் தின சந்தைக்காக உருவாக்கப்பட்டுள்ளது. பல சமூக ஊடக விளம்பரங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஆயுர்வேத திணைக்களத்தின் பெயரை தவறாக பயன் படுத்தி சொக்லேட் தயாரிக்கப்பட்டுள் ளது. காதலர் தினத்தை கொண்டாடும் இளைஞர்களை குறிவைத்து பல விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த சமூக வலைத்தளங்கள் மூலம் ஆயுர்வேதப் பெயரைப் பயன்படுத்தி ஆயுர்வேதமற்ற மருந்தை விளம்பரப்படுத்துவது சட்டவிரோதமானது மற்றும் நெறிமுறையற்றது.

ஆயுர்வேதத்திற்கும் சொக்லேட்டுகளுக் கும் உள்ள தொடர்பை நாங்கள் காண வில்லை. சொக்லேட்டை மருந்தாகப் பயன்படுத்துவதில்லை. எனவே, இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## மின்கட்டணம்....

மின்சார சபையின் தலைவர் தேசிய பேரவை கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

மின்சார கட்டணத்தை அதிகரிப் பது தொடர்பில் பொதுப் பயன்பாடு கள் ஆணைக்குழு நாளை மறுதினம் அறிவிக்கவுள்ளது. இது தொடர்பில் இறுதி முடிவை எட்டுவது தொடர்பில் தேசிய பேரவை நேற்று திங்கட்கிழமை அறிவுறுத்தல்களை வழங்கியது. இதன் போதே, தேசிய பேரவை கூட்டத்தில் பங்கேற்ற மின்சார சபையின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், மின்சார கட்டணத்தை அதிகரிக்காவிடின் எதிர்வரும் காலங்களில் நிலக்கரி இறக்குமதி செய்வதற்குக்கூட நிதி இல்லாமல் போகும். இதனால், நீண்ட நேர மின் துண்டிப்புக்குச்செல்லவேண்டிய நிலைமை காணப்படும் - என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை நாளை மறு தினம் அறிவிப்பதற்கு தற்து நடவடிக்கை எடுத்து வருவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தேசிய பேரவைக்கு தெரிவித்தனர். (ஐ)

## இழுத்தடிக்கும்...

கடன்களை வழங்கிய நாடுகளில் இந்தியா தனது நிலைப்பாட்டை கடந்த ஜனவரி 16ஆம் திகதி அளித்தது. அத்துடன், ஐ. எம். எவ். விதித்த நிபந்தனைகளையும் இந்தியா ஏற்றது.

ஆனால், நீண்ட இழுபறியில் இருந்த சீனாவுடனான கடன் மறுசீரமைப்புக்கு இந்த மாத முற்பகுதியில் உடன்பாட்டுக்கு வந்தது. ஆனால், சீனா இரு வருட அனுமதியையே வழங்கியது. இந்தக் கடன் மறுசீரமைப்பின்படி இரு வருட முதிர்வில் கடனின் மூலதனத்தையும் வட்டியையும் இலங்கை திரும்ப செலுத்த வேண்டும். ஆனால், அதற்குள் இலங்கை பொருளாதார மீட்சியை அடைந்திருக்காது.

இந்த நிலையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விடயத்தை கையாளும் பாரிஸ் கிளப் நிறுவனம் 10 - 15 வருட கால அவகாசத்தை கோருகிறது. இலங்கையை நிதி சரிவிலிருந்து காப்பாற்ற இது அவசியமானது. 10 வருட அவகாசம் என்பது பொருத்தமான காலக்கெடுவாக இருக்கும் என்று அறிந்தும் சீனா ஏன் இவ்வாறு அபத்தமாக இரு வருடங்களை வழங்கியுள்ளது என்றும் அந்த அமைப்பு கேள்வி எழுப்பியது.

எனினும், அந்த அமைப்பு இதனை கருத்தில் கொள்ளாமல் ஒப்புதல் அளித்துள்ளமை இலங்கைக்கு ஆறுதலான விடயம் என்று சர்வதேச ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ)

## பிரெஞ்சு..

சூழ்நிலைகள் சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புளொட் கட்சியின் தலைவர் த. சித்தார்த்தன், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அந்தக் கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வேந்தன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் சிறீகாந்தா ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இருந்தமையால் உடனடியாக இந்த சந்திப்பில் பங்கேற்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சுமண தேரர்...

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் தப்பியோடி விட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமண ரத்ன தேரர் ஆரம்பத்தில் தமிழர் தரப்புக்கு எதிராகவும் அண்மைக் காலங்களில் முஸ்லிம் தரப்புகளுக்கு எதிராகவும் செயல்பட்டவர். குறிப்பாக ஷரி ஆ பல்கலைக்கழகம் - அதனுடன் தொடர்புடைய நில ஆக்கிரமிப்பு தொடர்பில் அதிக எதிர்ப்பை வெளிப்படுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நான்கு...

நடந்த வழக்கில் இவர்கள் நால்வரையும் 5 இலட்சம் ரூபாய் காசுப் பிணையிலும், ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையிலும் செல்ல நீதிபதி அனுமதியளித்தார்.

2006 ஒக்ரோபர் 18ஆம் திகதி காலி தெற்கு கடற்படை முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கடற்படையை சேர்ந்த கனக சுரங்க என்பவர் உயிரிழந்தார். அத்துடன், 22 பேர் காயங்களுக்கு உள்ளாகினர். இது தொடர்பாக, தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டவர்களுக்கு எதிராக 23 வழக்குகள் கடந்த 2010ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்கில், முதலாம் எதிரியான கந்தையா இளங்கோ யுத்தத்தின் இறுதிக் காலகட்டமான 2009ஆம் ஆண்டு இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத விசாரணை பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

புதுக்குடியிருப்பை சேர்ந்த இளங்கோவுக்கு எதிராக வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களும், 77 சாட்சிகளும், 27 தடயப்பொருட்களும் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் அரச தரப்பு சான்றாக பெயரிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது.

முதலாம் எதிரியின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா தனது பிணை மனு சமர்ப்பணத்தில், கந்தையா இளங்கோவால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல்வாக்குமூலம் - உண்மை விளம்பல் விசாரணையில் 21.06.2018 அன்று நீதிமன்றால் நிராகரிக்கபப்பட்டு 5 வருடங்களை அண்மிக்கின்றது. அத்துடன், 2009 ஆம் ஆண்டு விமானப் படையின் குண்டு வீச்சால் இளங்கோ தனது வலது காலை இழந்தார். இந்த சம்பவம் நிகழ்ந்து 14 வருடங்களாகியும் விசாரணை முற்று முழுதாக நிறைவடையாது சிறையில் வாடுகிறார் என்றும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

கே. வி. தவராசாவின் வாதத்தை யடுத்து காலி மேல் நீதிமன்ற நீதிபதி முதலாம் எதிரியான கந்தையா இளங்கோ உள்ளிட்ட நான்கு தமிழ் அரசியல் கைதிகளையும் பிணையில் செல்ல அனுமதியளித்தார்.

இந்த வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் பிரதி மன்றாடியார் நாயகம் முஹமட் பாரி முன்னிலையானார். அரசியல் கைதிகளின் சார்பில் சட்டத்தரணி த. தர்மராஜாவின் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா முன்னிலையாகி வாதிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ்.மாநகர சபை பட்ஜெட் இன்று

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ். மாநகர சபையின் வரவு - செலவு திட்டம் இன்று செவ்வாய்க் கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளது. மாநகரின் ஆட்சிக்காலத்தில் ஏற்கெனவே, வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் பதவியிழந்த தற்போதைய முதல்வர் இ. ஆனல்ட் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கிறார்.

இன்றைய தினம் நடைபெறவுள்ள வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தமிழரசு கட்சி தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்றது.

இந்த வரவு - செலவு திட்டத்தில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பது தெரிவிக்கப்படவில்லை.

மணிவண்ணன் தரப்பு வரவு - செலவு திட்டத்தை எதிர்க்கும். இதேசமயம், ஈ. பி. டி. பியின் நிலைப்பாடு என்ன என்பதும் தெரியவரவில்லை. (ஐ)

# 150 மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

கொழும்பு, பெப். 14

நீரிழிவு நோயாளிகளுக்கான இன்சுலின், மெட்போர்மின், இதய நோயாளிகளுக்கான அஸ்பிரின், குழந்தைகளுக்கான சிரப், மயக்க மருந்து மற்றும் புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய்களுக்கான மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

1, 300 அத்தியாவசிய மருந்துகளில் 140 முதல் 150 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில அத்தியாவசிய மருந்துகளின் கையிருப்பு ஜனவரி இறுதிக்குள் தீர்ந்துவிட்டன. இந்த மருந்துகளை பிரதியீடு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

மேலும், சில மருத்துவமனைகளில் மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றன. மருந்துப் பற்றாக் குறையால் சத்திரசிகிச்சைகள் சில இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேசமயம், நாட்டில் அதிகரித்து வரும் மருந்துப் பற்றாக்குறைக்கு தீர்வு கிடைக்காமையால், பல மருத்துவமனைகளில் மருத்துவப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் மருத்துவக் களஞ்சியங்களிலும் மாகாணப் பகுதிகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட மருந்துப் பொருட்கள் மட்டுமே இருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

## மகிந்தவின்...

இறுதியில் பெரும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது. இலங்கை அரசியல் வரலாற்றில் எவருக்கும் நேராத நிலைமை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டது. மக்கள் போராட்டத்துக்கு மத்தியில் உயிரை பாதுகாத்துக் கொள்ள நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் பயணத்தை நாமல் ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் முழுமையாக இல்லாதொழித்துள்ளார்கள். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை ராஜபக்ஷர்கள் குடும்பம் முழுமையாக ஆக்கிரமித்ததால் இரண்டரை வருட காலத்திற்குள் நாட்டில் பெரும் அரசியல் மாற்றம் ஏற்பட்டது.

ராஜபக்ஷர்களுடன் இனியொரு போதும் ஒன்றிணையப் போவதில்லை. அரசியல் ரீதியில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ராஜபக்ஷர்களுக்கு எதிராக தனித்து அரசியல் கூட்டணியை ஸ்தாபித்துள்ளோம் - என்றார். (ஐ)

## அத்தியடியில்...

சுப்பிரமணியம் கலாநிதி (வயது-52) என்ற பெண் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை இடம்பெற்ற வீட்டுக்கு ஒரு நபர் நீண்ட காலமாக ஆடுகளுக்கு குழை வெட்ட, வீட்டு வேலைகளுக்காக வருகை தருவார். நேற்று முன்தினம் காலையும் அவர் வழமைபோல் வருகை தந்து இரவு வரை வீட்டில் வேலை செய்துகொண்டிருந்துள்ளார். இறந்தவரின் மகள் வீட்டுக்குள் இருந்துள்ளார்.

வேலைக்காக வருபவரும் தாயாரும் சண்டை பிடிக்கும் சத்தம் கேட்டு மகள் வெளியே வந்து பார்த்தபோது வேலை செய்து கொண்டிருந்தவரை காண வில்லை எனவும் தாயார் இரத்தம் தோய்ந்த நிலையில் நிலத்தில் கிடந்தார் எனவும் விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையின்போது குறித்த நபர் மரக் கட்டை ஒன்றினால் பெண்ணைத் தலையில் தாக்கி விட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் தடயவியல் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## வாக்குச்சீட்டு...

அரசாங்க அச்சகத்தின் இந்த அறிவிப்பால் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறுவதில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்காக 77 கோடி ரூபாயை இந்த மாதத்தில் விடுவிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு திறைசேரியிடம் கோரியிருந்தது. ஆனால், 10 கோடி ரூபாயையே தேர்தல் ஆணைக்குழுவுக்கு திறைசேரி விடுவித்தது. இந்த நிலையில் அரசாங்க அச்சகத்தின் அறிவிப்பு தேர்தல் திட்டமிட்டபடி நடத்தப்படுவதை கேள்வியாக்கியுள்ளது.

இதேசமயம், தேர்தலுக்கு ஒத்துழைப்பு தராத நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றை நாடுவோம் என்று தேர்தல் ஆணைக்குழு நேற்று முன்தினம் எச்சரித்திருந்தமையும் நினைவில்கொள்ளத்தக்கது. (ஐ)

## வாள்வெட்டு...

இரவு 9 மணியளவில் உருத்திரபுரம் சிவநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. மரண வீடு ஒன்றில் இடம்பெற்ற கருத்து முரண்பாடு இந்த சம்பவத்துக்கு வழிவகுத்துள்ளது.

15 இற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட குழு வாளினால் சரமாரியாக வெட்டியுள்ளது. இதன்போது படுகாயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும், தாக்குதல் மேற்கொண்ட குறித்த குழுவை சேர்ந்த ஒருவருமாக நால்வர் நோயாளர் காவு வண்டி மூலம் வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் உயிரிழந்துடன் மேலும் இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, மற்றய நபர் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் சிவநகர் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய சண்முகசுந்தரம் யசோதரன் என்ற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த நாட்டில் சிலர் சதி!

## காஞ்சன விஜேசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 14

தேர்தலுக்கு முன்னர், நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த சிலர் சதி செய்வதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

அடுத்த மாதம் 8 மற்றும் 9 ஆம் திகதிக்குள் இவ்வாறான சதிகளைச் செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது என அவர் கூறினார்.

ஏழரை மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதையும், இரண்டு மூன்று நாட்களாக மக்கள் வரிசையில் காத்திருந்ததையும் சிலர் மறந்துவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் மின்சாரசபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் செலவுகளையும் நிர்வகிக்க வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். (அ)

# எரிபொருள் பிரச்னைக்கு நானே தீர்வு வழங்கினேன்

## ஆனால் அதை பஸில் எதிர்த்தார் என்கிறார் உதய கம்மன்பில



கொழும்பு, பெப். 14

எரிபொருள் தேவை மற்றும் விநியோகத்தை நிர்வகித்து எரிபொருள் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்காக தாம் முன்வைத்த தீர்வுகள் மற்றும் முன்மொழிவுகளை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ எதிர்த்தார் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஆனால் இறுதியில் தான் முன்வைத்த தீர்வுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவேண்டியிருந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (அ)

# 13ஆவது திருத்தத்தை வலியுறுத்த இந்தியாவுக்கு உரிமை கிடையாது!

## கூறுகின்றார் சரத் வீரசேகர எம்.பி.



கொழும்பு, பெப். 14

**13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்க இந்தியாவுக்கு தார்மீக உரிமை கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

இந்தியாவின் மேற்பார்வையுடனான விசேட பொறிமுறையை உருவாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவதானம் செலுத்தியுள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இந்தியா பலவந்தமான முறையில் 13 ஆவது திருத்தத்தை இலங்கைக்கு அமுல்படுத்தியது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

வடக்கு-கிழக்கு மக்களை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்யும் தமிழ்த் தலைவர்கள், அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண அவதானம் செலுத்துவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கே மக்கள் ஆணை வழங்கினார்கள் என்பதனால் ஜனாதிபதி அது குறித்தே அவதானம் செலுத்த வேண்டும் எனவும் சரத் வீரசேகர கூறினார்.

மேலும் ஒற்றையாட்சிக்குள் அதிகார பகிர்வு வழங்கப்பட்டாலும் பொலிஸ் அதிகாரத்தில் மாற்றமில்லை என கூறும் ஜனாதிபதியின் உறுதிப்பாடு எவ்வளவு நாட்களுக்கு செல்லுபடியாகும் என்றும் சரத் வீரசேகர கேள்வியெழுப்பினார். (அ)

# யாழ். மாநகர அபிவிருத்தி தொடர்பாக கனடா தூதர் - முதல்வர் கலந்துரையாடல்!



யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இமானுவல் ஆனல்ட்டை இலங்கைக்கான கனடியத் தூதுவர் எரிக்ஸ் வோல்ஸ் ஆகியோருக்கிடையில் இடையில் விசேட சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பு தொடர்பாக கருத்து வெளியிட்ட முதல்வர் "யாழ்ப்பாணம் மாநகரத்தின் செயற்பாடுகள், முன்னேற்றங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டதுடன் பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மாநகரத்துக்கான பாதாள சாக்கடைத் திட்டம் ஒன்று முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும், இது தொடர்பில் கனடா ரொறன்ரோ மாநகர முதல்வருடன் ஏற்கனவே, 3 வருடங்களுக்கு முன்பு கதைத்திருந்த விடயம் தொடர்பாகவும், அதனை நாட்டில் ஏற்பட்ட கோவிட் 19 அசாதாரண நிலைமைகள் காரணமாக நடைமுறைப்படுத்த முடியாது போனதாகவும், அதனை மீள ஆராய்வதற்கான நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை கனடா டொரொன்டோ மாநகரத்தின் ஊடாக பெற்றுத்தருவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கோரியதாகவும். இதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தூதுவர் குறிப்பிட்டார் என்றும் தெரிவித்தார்.

மேலும் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் ஏற்படுத்தப்படும் தடைகள் மற்றும் பிரச்னைகள் தொடர்பிலும், மக்களின் நிலைமைகள் தொடர்பிலும் முதல்வர் தூதுவரிடம் கேட்டறிந்து கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

# தடையற்ற மின்சாரம் வழங்குவதற்கு கட்டண அதிகரிப்பு தவிர்க்க முடியாதது!

## அமைச்சர் காஞ்சன விஜயசேகர

கொழும்பு, பெப். 14

தேர்தல் காலத்தில் நாட்டில் பெரும் பிரச்னைகளை தோற்றுவிப்பதற்கான குறுகிய அரசியல் நோக்கங்களில் சில குழுக்கள் செயல்பட்டுக் கொண்டிருகின்றன. எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் தடையற்ற மின் விநியோகத்தை வழங்குவதற்கு மின் கட்டண அதிகரிப்பை தவிர்க்க முடியாது என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

மாத்தறையில் பிரசாரம் ஒன்றில் பங்கேற்ற அவர்,

"மின் கட்டணம் அதிகரிக்கப்படுகின்றமையை நானும் முற்றாக எதிர்க்கின்றேன். கடந்த ஆட்சி காலங்களில் பல ஆண்டுகளாக எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் எடுக்கப்படாமையின் காரணமாகவே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிர்மாணிக்கப்படவிருந்த சாம்பூர் மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் காரணமாகவே கடந்த ஆண்டு 8 மணித்தியாலங்கள் வரை மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்த வேண்டியேற்பட்டது. அது அமைக்கப்பட்டிருந்தால் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்கியிருக்க முடியும்.

எனவேதான் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து பல்வேறு கடினமான தீர்மானங்களை நாம் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். தற்போது உயர்தர பரீட்சை காலத்தில் தடையின்றி மின்சாரத்தை வழங்காமையின் காரணமாக எம்மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால், நாம் கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களில் தடையற்ற மின் விநியோகத்திற்கான திட்டமிடலை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்கினோம்.

அமைச்சரவைக்கும் அந்த செயற்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த வருடத்தைப் போன்று நீர் மின் உற்பத்தியை முழுமையாகப் பயன்படுத்தி விட்டால் மார்ச், ஏப்ரலில் 5 மணித்தியால மின் துண்டிப்பிற்கு செல்ல நேரிடும். எனவே தான் தற்போது நாம் அதனை முகாமைத்துவம் செய்து கொண்டிருக்கின்றோம்.

மார்ச் 9 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு மார்ச் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் நாட்டில் பிரச்னைகளை தோற்றுவிப்பதற்கு ஒரு சில குழுக்கள் முயற்சிக்கின்றன.

சில ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் கூட இந்த அரசியல் நோக்கங்களுக்கு துணை போகின்றனர். எவ்வாறிருப்பினும் கட்டணத்தை அதிகரித்தால் மாத்திரமே தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க முடியும் - என்றார். (ஐ)

# ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை உள்வாங்க வலியுறுத்தி போராட்டம்




கொழும்பு, பெப். 14

ஆசிரியர் சேவைக்கான கூடிய தகுதியுடைய பட்டதாரிகளை காலம் தாழ்த்தாது ஆசிரியர் சேவைக்கு உள்வாங்க வேண்டும் என்று கோரி ஆரப்பாட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

கல்வியலாளர்கள் பட்டதாரிகள் ஒன்றியம் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தினரால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பத்தரமுல்லை இசுறுபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.